மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 09 புதன்கிழமை (24.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# பொருளாதாரம் சீர்குலையும் போது இனப்படுகொலை பலவீனமடையும்

## நடேசன் றொய்ட்டருக்கு பேட்டி

(கிளிநொச்சி)

இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைக்கப்படும் போது தான் தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் இனப்படு கொலை பலவீனப்படுத்தப்படும் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார். றொய்ட்டருக்கு மின்னஞ்சல் மூலம் அவர் அளித்த நேர்காணலி லேயே இதனைத் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## உதவி நிறுவனங்கள் வன்னி செல்ல அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்

### ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசங்களுக்குள் செயற்படுவ தற்கு உதவி நிறுவனங்களுக்கு மீண்டும் அனுமதியளிக்க வேண்டும் என்று ஹியூ மன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

போர் காரணமாக அந்தப் பகுதியில் சுமார் மூன்று லட்சம் பேர் வரை இடம் பெயர்ந்துள்ளனர். *(12ஆம் பக்கம் பார்க்க)*

## தேசிய சுதந்திர முன்னணி அரசுடன் இணைகிறது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீர வன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன் னணி; ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்

## படையினர் புலிகள் கடும் மோதல் சின்னப்பரந்தன் இராணுவத்தினர் வசம்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி பரந்தன் மேற்குப் பகுதியில்

மேலும் பலர் காயமடைந்துள்ளதாக இரா ணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாண

## இன்று இரவு முழுவதும் ஊரடங்கு தளர்வு

(யாழ்ப்பாணம்)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்று முழுநாளும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட் டிருக்கும் என பலாலி படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.


# இரண்டாவது டெஸ்ட் சமனிலையானது இந்திய அணி தொடரை சுவீகரித்தது

## இங்கிலாந்து அணிக்கு ஏமாற்றம்

(மொகாலி)

இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைய இந்திய அணி தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி 7 ஒருநாள், போட்டி, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.



இதில் ஒருநாள் தொடரில் நடைபெற்ற 5 போட்டிகளில் வெற்றிபெற்று தொடரில் 5:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் கடந்த மாதம் 26ஆம் திகதி மும்பையில் நடைபெற்ற பயங்கரவாத தாக்கு தலையடுத்து இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை இடை நிறுத்தி நாடு திரும்பியது.

பின்னர் இந்தியாவில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்பு மீண்டும் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது.

இதில் சென்னையில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்த நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 19ஆம் திகதி மொகாலியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி; அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 453 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 302 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 151 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம்நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதி நாளுமான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்-யுவராஜ் ஜோடியின் அதிரடியான ஆட்டத்தால் ஓட்டஎண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இதில் காம்பீர் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய தொடர்ந்து யுவராஜ் சிங்கும் 57ஆவது பந்தில் தனது அரைச்சதத்தையும் பூர்த்திசெய்ய இந்திய அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக 153 ஓட்டங்களை எடுத்த போது



யுவராஜ் சிங் 93 பந்துகளில் (6 பவுண்டரி,4 சிக்ஸர்கள் அடங்கலாக) 86 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலை



வர் தோனி களமிறங்கி 2ஆவது பந்திலேயே ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஹர்பஜன் சிங் களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய கௌதம் காம்பீர் 97 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சதம் பெறும் வாய்ப்பை தவறவிட்டார்.

இந்நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 251 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தி இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 403 ஓட்டங்களை நிர்ணயித்தது.

இதில் ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் அன்டர்சன்,பிரோட்,ஸ்வான் மற்றும் பனீசர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து 403 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி ஐந்தாவதும் இறுதி நாளுமான நேற்றய ஆட்டம் முடிபடையும் போது ஒரு விக்கெட்டையிழந்து 64 ஓட்டங்களை எடுத்தது.

இதனடிப்படையில் இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைய இந்திய அணி 1:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இதில் ஸ்ரொரஸ் 21,பெல் 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் குக் 10 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் இஷாந் சர்மா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இப்போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 179 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 97 ஓட்டங்களையும் எடுத்து இந்திய அணிக்கு வலுச் சேர்த்த கௌதம் காம்பீர் ஆட்ட நாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை சகீர் கானும் பெற்றார்.

## பாகிஸ்தான் - இலங்கை தொடர்; பாதுகாப்பு குறித்து ஐ.சி.சி. ஆய்வு

(மொகாலி)

பாகிஸ்தான்-இலங்கை இடையிலான தொடருக்கு நடுவர்களை அனுப்புவதற்கு முன்னர். பாதுகாப்பு குறித்து பாகிஸ்தானில் ஆய்வு மேற்கொள்ளப்படும் என சர்வதேச கிரிக்கெட் சபை முதன்மைச் செயல் அதிகாரி ஹாரூன் லோர்கட் தெரிவித்துள்ளார்.

குண்டுவெடிப்பு உள்ளிட்ட பயங்கரவாத சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தானில் விளையாடுவதை அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தவிர்த்து வருகின்றன. இதற்கிடையே மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய பயங்கரத்தாக்குதல் காரணமாக இந்தியாவும் அங்கு தொடரில் விளையாட இருந்ததை ரத்து செய்தது. இந்திய அரசு அதற்கு அனுமதி மறுத்துவிட்டது.

இதையடுத்து இலங்கை அணியை அழைத்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. இலங்கை கிரிக்கெட் சபையும் அதற்கு சம்மதம் தெரிவித்தது.

3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரு இருபது-20 போட்டியில் விளையாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அத் தொடருக்கு நடுவர்கள் குழுவை அனுப்பவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளது ஐ.சி.சி.

பாகிஸ்தானில் நிலவும் பாதுகாப்புக் குறித்து இலங்கை கிரிக்கெட் சபை கவலை கொள்ளாவிட்டாலும் நடுவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவை அனுப்புவதற்கு முன்னர் பாகிஸ்தானில் முறையாக ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன் பின்னரே இறுதி முடிவு மேற்கொள்ளப்படும் என மொகாலியில் நேற்று முன்தினம் லோர்கட் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி மீண்டும் அங்கு நடைபெறுவது குறித்தும் சந்தேகம் தெரிவித்தார். (5)


## மரண அறிவித்தல்

### திருமதி விசாலாட்சி சின்னத்துரை (சாம்பசிவம்)

அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி K.V.K. அரிசி ஆலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி சின்னத்துரை 23.12.2008 (நேற்று) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், பவளம்மா, கனகம்மா, சிவமலர், நாகேந்திரம் (மதுரா கபே, வவுனியா), சிவமணி, நாகராசா, சண்முகராசா, சிவகங்கை ஆகியோரின் அன்புத் தாயாரும்;

சோமலிங்கம், தம்பிராசா (ஞானம்ஸ் கபே, வவுனியா), லோகநாதன் (பிரதம ஒப்புநோக்குநர், வலம்புரி), திருமதி நா.புவனேஸ்வரி, கிருஷ்ண பிள்ளை (K.V.K. அரிசி ஆலை, உடுப்பிட்டி),காலஞ்சென்ற ந.சர்வேஸ்வரி மற்றும் திருமதி ச.சிறீபதி, சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

திரிபுரசுந்தரி (டென்மார்க்), ஞானகுமார் (லண்டன்), சாந்தகுமார், தயாபரன் (SFB மட்டக்களப்பு), தயானந்தி, பிரபாகரன் (ஞானம்ஸ் கபே, வவுனியா), பிரமாதீஸன் (சுப்பஸோ -யாழ்ப்பாணம்), ஆனந்தவதனி (கனடா), கமலவதனி (ஜேர்மனி), நாகதீபன் (கொழும்பு), தர்மினி, சாளினி, சேந்தன் (கொழும்பு), சயந்தன், சயந்தினி, நர்மதா (சுகாதாரத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), கிருபனா (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கிருஷாந்தன் ( K.V.K. உடுப்பிட்டி), கலைச்செல்வி (மொறட்டுவ பல்கலைக்கழகம்), மீரா, நிரூசன் (கொழும்பு பல்கலைக்கழகம்), வாகினி (மாணவி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மயூரன் (மாணவன், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி), கபிலன் (மாணவன், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24.12.2008) நண்பகல் 12.00 மணியளவில் உடுப்பிட்டி K.V.K. அரிசி ஆலை ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி முள்ளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.V.K. அரிசி ஆலை,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-1904)

# இன்று ஒரு தகவல்

## சிறந்தவன் யார்?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு மிகவும் வயதாகி விட்டது. அடுத்ததாக ஒரு இளவரசன் பட்டத்துக்கு வரவேண்டும்.

அந்த ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள்.

மூவரும் ஒன்றாக பிறந்ததால் மூவருக்கும் ஒரேவயது இதனால் யார் ராஜாவாக வருவது என்பதில் பிரச்சினை வந்து விட்டது. குதிரையேற்றம், வில்வித்தை எல்லாவற்றிலும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான திறமை.

இந்த மூவரில் யார் சிறந்தவன்? என்று கண்டுபிடிக்க வேண்டும். எப்படி கண்டுபிடிப்பது?

ராஜா யோசனை செய்தார். அவரால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. அதனால் நேராக காட்டுக்குப் போனார். அங்கே ஒரு குரு இருந்தார். அவரிடம் போய் யோசனை கேட்டார். அவர் இதற்கு ஒரு யோசனை சொன்னார். அதைக்கேட்டு திரும்பி வந்தார்.

மூன்று பிள்ளைகளையும் கூப்பிட்டு மூவரிடமும் சம அளவு பணத்தைக் கொடுத்தார்.

அவர்கள் மூவரும் தனித்தனி மாளிகையில் குடியிருந்தார்கள். அவர்களிடம் "இதோபாருங்கள்! உங்கள் மூவருக்கும் ஒரேயளவு பணம்தான் கொடுத்திருக்கிறேன். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், இந்தப் பணத்தைக் கொண்டு உங்கள் மாளிகையை நிரப்பவேண்டும். உங்களுக்கு ஏழுநாள் அவகாசம் தருகிறேன் ஏழு நாட்களுக்குப் பின் வந்து பார்ப்பேன்.

மாளிகை முழுவதும் மற்ற இருவரைக் காட்டிலும் யார் நல்லா நிரப்பியிருக்கிறார்களோ. அந்தப் பிள்ளைதான் எனக்குப் பின்னால் அரசனாக வருவான் " என்றார்.

மூன்றுபேரும் யோசனை செய்தார்கள் கொடுத்திருக்கிற பணமோ மிகவும் குறைவு. மாளிகையோ பெரியது. எதை வாங்கிப்போட்டு நிரப்புவது?

முதல் இளவரசன் பார்த்தான் நேராக குப்பை அள்ளும் இடத்துக்குப்போனான்.

இனிமேல் ஊருக்கு வெளியே கொண்டுபோய் கொட்டும் குப்பை வண்டியெல்லாம் என்மாளிகைக்கு வரவேண்டும். அங்கே குப்பையைக் கொட்டவேண்டும். என்று உத்தரவிட்டான்.

இவ்வளவு குறைவான பணத்தைக் கொண்டு மாளிகையை நிரப்ப வேண்டுமானால் அதற்கு இதுதான் வழி என்று முடிவு செய்தான்.

இரண்டாவது இளவரசன் பார்த்தான்.

என்ன செய்வது என்று சிலபேரை யோசனை கேட்டான்.

"உன்னுடைய சகோதரன் குப்பையால் நிரப்பி விட்டான். நீயும் அதுமாதிரி ஏதாவது செய் நம் ஊரில் புல்தான் ரொம்ப மலிவு. கட்டுக்கட்டாக கொண்டுவந்து போடச்சொல் "

என்று ஒருவர் யோசனை சொன்னார்.

அப்படியே செய்தான். அரைவாசி நிரம்பவும் பணம் முடிந்து விட்டது. " அதற்குள் ஏழுநாள் முடிந்துவிட்டது.

ராஜாவும் குருவும் ஒவ்வொரு மாளிகையாக பார்த்துக் கொண்டு வருகிறார்கள்.

முதல் மாளிகையை நெருங்கவே முடியவில்லை. அவ்வளவு துர்நாற்றம்.

இரண்டாவது மாளிகையில் அழுகிப்போன புல் இருந்தது. அதுவும் அரைவாசிதான்.

மூன்றாவது மாளிகைக்குப் போனார்கள். அங்கு போய்ப் பார்த்தால் எதுவுமே இல்லை. ஏற்கனவே அங்கிருந்த ஒருசில பொருட்களையும் எடுத்து அப்புறப்படுத்தி இருந்தார்கள். வீடு முழுவதும் காலி. "நீ என்ன செய்திருக்கிறாய்?" என்று கேட்டார் ராஜா.

"பாருங்கள் அது நிரம்பியிருக்கிறது!" என்றான் பிள்ளை ராஜாவுக்குப் புரியவில்லை. கோபம் வந்துவிட்டது.

குரு சொன்னார்! "கோபப்படாதே! வீடு நிரம்பியிருக்கிறது. உனக்குப் பழக்கமில்லாத ஒன்றால் அது நிரம்பியிருக்கிறது. உன் பிள்ளை அகல் விளக்குகளை வாங்கி தீபம்ஏற்றி வைத்திருக்கிறான். மாளிகை முழுவதும் ஒளியில் நிறைந்திருக்கிறது" என்றார்.

மன்னர் மனம் வெளிச்சமானது. இந்த மகனையே இளவரசனாக்கினார்.

இந்தக்கால வாரிசுகளெல்லாம் எப்படிதெரியுமா? ஒரு பையன் ஒரு வேலையும் செய்யாமல் ஈஸிசேரில் கால்மேல் கால்போட்டு படுத்திருந்தான்.

அப்பா புத்தி சொல்ல ஆரம்பித்தார்.

"இப்படி இருந்தால் எப்படி? மற்றவர்களைப்போல் சுறுசுறுப்பாக இருக்க வேண்டாமா?" என்றார்.

"மற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள்?" என்று கேட்டான் பையன்.

"வேலைக்குப் போகிறார்கள் உழைக்கிறார்கள்" என்றார்.

"உழைத்தால் என்ன கிடைக்கும்" என்றான்.

"பணம் கிடைக்கும்" என்றார்.

"பணம் கிடைத்தால் என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

"வீடு கட்டலாம்"

"வீடு கட்டினால் என்ன செய்யலாம்?"

"சோஃபா, ஈஸிசேர் எல்லாம் வாங்கிப் போடலாம்."

"வாங்கிப் போட்டால் "

"அதில் கால்மேல் கால்போட்டு சுகமாக உட்கார்ந்திருக்கலாம்!"

"இப்பவே நான் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறேன்!" என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட பட்டியல் வெளியீடு

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் புதிய பட்டியல் ஒன்றை கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம். என்.பீ. பண்டார விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் IIஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட பட்டியல் தொடர்பில் ஏதாவதொரு மறுசீரமைப்பு அல்லது ஆட்சேபனைகள் தெரிவிக்கவேண்டியிருப்பின் அதற்குரிய ஆவணங்களுடன் திணைக்களப் பொறுப்பாளர் ஊடாக 2009.01.05ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவிக்குமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

இதனடிப்படையில் 2009.01.05 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகத்தர்களினால் ஏதாவதொரு தவறினை திருத்தியமைக்க அல்லது ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படாதிருப்பின் உரிய உத்தியோகத்தர்களின் பெயருக்கு முன்னால் காணப்படும் தகவல்கள் சரியானதென கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கிறேன் என குறிப்பிடப் பட்டுள்ளது.

மேற்படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களின் சிரேஷ்ட பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள் தமிழ் மொழி மூலமானவர்களின் விபரம் வருமாறு:

எம்.பரஞ்சோதி (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), திருமதி ஏ.வேதநாயகம் வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), திருமதி எஸ்.மகாலிங்கம் (வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்), பி.அரியரத்தினம் (வலயக்கல்வி அலுவலகம், கிளி நொச்சி), ஏ. பொன்னையா (வலயக் கல்வி அலுவலகம், வவுனியா), வேணுகோபாலநேசன் (வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), ரி.குருகுலராஜா(வலயக்கல்வி அலுவலகம் , கிளிநொச்சி), வி.ரி.செல்வரட்ணம்(வலயக்கல்வி அலுவலகம் வடமராட்சி), ஜீ.விக்னேஸ்வரன் (வலயக்கல்வி அலு வலகம், வலிகாமம்), யு.எம். சந்திரசேனா (வலயக்கல்வி அலுவலகம், வவுனியா), எச்.டி.ரி. பெனடிக்ட் (வலயக் கல்வி அலுவலகம், வவுனியா), திருமதி ஆர்.இருதயநாதன்(வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), என்.வரதராசா (வலயக்கல்வி அலுவலகம் , யாழ்ப்பாணம்), எஸ்.உதயகுமார் வயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), எஸ்.இரத்தினராஜா (கொக்குவில் மேற்கு), எஸ். சிவராஜா (அல்வாய் மேற்கு), எஸ்.சுப்பிரமணியம்(நல்லூர்), வி.வேலுப்பிள்ளை (நல்லூர்), கே.பொன்னம்பலம்(தெல்லிப்பளை), வி.இராசையா(திருகோணமலை), திருமதி வி.ஆர்.ஏ.ஒஸ்வேல்ட் (வலயக்கல்வி அலுவலகம் வவுனியா)

இது தொடர்பான மேலதிக தகவல்களை கல்வி அமைச்சின் இணையத்தளமான www .moe.gov.lkஎன்ற முகவரியிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (5)

# நடமாடும் சேவை

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழக அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் இன்று காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 .00 மணிவரை நடமாடும் காலங் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் ஆகிய பதிவுகள் நடைபெறவுள்ளது.

இந்தநடமாடும் சேவையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த காலம் கடந்த பிறப்பு ,இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் கலந்துகொண்டு பயன்பெறலாமென பிரதேச செயலாளர் எஸ். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5)

# மகளிர் விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக நடத்திவரும் *பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளைப் பாதுகாத்தலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான விழிப்புணர்வும்* என்ற ஒரு நாள் கருத்தரங்கு இன்று காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மகளிர் அபிவிருத்தி நிலைய திட்ட உத்தியோகத்தர் வே. சுவேந்தினி , காரைநகர் மகளிர் அபிவிருத்தி நிலைய வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி. க. கலையரசி சட்டத்தரணி மு. றெமிடியஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (5)

# இராசி பலன்

**24.12.2008**
**(மார்கழி 09, புதன்கிழமை)**
**துவாதசி முற்பகல் 12.25 மணிவரை**
**விசாகம் முற்பகல் 1.41 மணிவரை**
**இராகுகாலம் 12.26-1.56 மணிவரை**
**சுபநேரம் 4.56-6.26 மணிவரை**
**பிரதோஷ விரதம்**

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், காரிய தாமதம், தந்தை வழிஉறவு, பிரயாணம் |
| இடபம் | அமைதிக்குறைவு, காரிய தடங்கல், அபகீர்த்தி, பிரயாண பயம் |
| மிதுனம் | எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி, அபூர்வ சந்திப்பு, போசன சுகம் |
| கடகம் | உற்சாகம், தடைப்பட்ட காரியம் கைகூடும், பகைவரால் நன்மை, போசன நன்மை |
| சிங்கம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பணவிரயம், ரோகநிலை |
| கன்னி | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், பணவிரயம், காரிய தாமதம் |
| துலாம் | கூட்டு முயற்சி, பணவருவாய் , பிரயாணம், விருந்துபசாரம் |
| விருச்சிகம் | வீண்மனஸ்தாபம், எடுத்த காரியம் தாமதமாகும், குடும்பக் கவலை, பணவிரயம் |
| தனுசு | கற்பனை மிகுதி, போசன சுகம், தொழில் நன்மை, காரிய சிந்தை |
| மகரம் | பிரயாணக் கஷ்டம், பணவிரயம், காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு |
| கும்பம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பொருள்சேர்க்கை, விருந்துபசாரம். |

வளவன்

# மாகாண சபைகளின் அபிவிருத்திக் கூட்டம் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றது

(திருகோணமலை)

நாடளாவிய ரீதியில் அனைத்து மாகாண பிரதம செயலாள்களும் பங்கு பற்றிய உள்ளூராட்சி மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அபிவிருத்தி கூட்டம் கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

மாகாண மட்டத்தில் கலந்துகொண்ட பிரதம செயலாளர்களால் ஆளணி உருவாக்கம், உள்ளூராட்சி மறுசீரமைப்பு, வெற்றிடங்கள், நியமனங்கள் மற்றும் கணக்காய்வு தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 17.05.1999 இல் நியமனம் பெற்ற பட்டதாரி அலுவலர்களது சேவைப் பிரமாண குறிப்பு பதவி உயர்வு பரீட்சை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அத்துடன், புதிய உள்ளூராட்சி சபைகளின் உருவாக்கம் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து பிரதம செயலாளர்களான எஸ். ரங்கராஜன் வே.பொ.பாலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது.(5)

# உள்ளூராட்சி மன்றங்களிடையே முகாமைத்துவப் போட்டி

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண அனுசரணையுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையேயான முகாமைத்துவ போட்டி விரைவில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கு இடையேயான (2007) முகாமைத்துவ சேவைகளை மேம்படுத்துவதற்காக இப் போட்டி நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை மேலும் திட்டமிட்டு போட்டித்தன்மையுடன் திகழக்கூடியவாறும் அவற்றின் மொத்த செலாற்றுகையை அதிகரிப்பதன் மூலம் வினைத்திறன்மிக்க பயனுறுதி வாய் ந்த பொதுமக்களுக்கான சேவையை வழங்கு வதற்கு உள்ளூராட்சி மன்றங்களை வழி நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (5)

# நிஷா அனர்த்தத்தில் பழுதடைந்த தேவரதத்தை திருத்தியமைக்க மூன்று மாதங்கள் தேவை

## அது வரை தனியார் படகுச் சேவை நடைபெறும்

(ஊர்காவற்துறை)

கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் நிஷா புயலினால் ஊர்காவற் துறை பிரதேச சபைக்கு சொந்தமான தேவ ரதம்படகு பாதிப்புக்குள்ளாகியதால் பயணி கள் போக்குவரத்துச் சேவை இடை நிறுத்தப் பட்டுள்ளது.

குறித்த படகு திருத்தியமைப்பதற்கு மூன்று மாதங்களாகுமெனத் தெரிவித்த ஊர்காவற் துறை பிரதேச சபைச் செயலாளர் ஏ. கணே சானந்தராஜா அது வரை தனியார் படகு சேவைகளை மேற்கொள்ள ஒழுங்கு செய் யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த மாத இறுதியில் கரம்பன் கண் ணகை அம்மன் இறங்கு துறையில் தரித்து நின்ற வேளையில் ஏற்பட்ட கடும் காற்று மற்றும் மழையினால் படகின் இயந்திரப் பகு தியினுள் கடல் நீர் உட்புகுந்துள்ளது.

இதனால் பழுதடைந்த தேவரதம் படகை திருத்த வேலைகளுக்காக ஊர்காவற்துறை கடற் தொழிலாளர் சம்மேளனத்திடம் 3 மாத ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ளதாக ஊர் காவற் துறை பிரதேச சபைச் செயலாளர் ஏ. கணேசானந்தராஜா தெரிவித்தார்.

குறித்த திருத்த வேலைகளுக்காக கொழும் பிலிருந்து பொருட்கள் எடுத்து வர வேண்டியுள் ளதாலேயே மூன்று மாத காலம் தேவை யாகவுள்ளதெனவும் அவர் குறிப்பிட் டார்.

இதே வேளை, தேவரதம் படகுச் சேவை கரம்பொன் கண்ணகை அம்மன் கோயில் இறங்கு துறையிலிருந்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்கள் எழுவை தீவு ,அனலை தீவு மற்றும் நயினா தீவு ஆகிய இடங்களுக்கு சேவையை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.(5)

# தென்மராட்சி கிழக்கிற்கு விரைவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் நியமிக்கப்படுவர்

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கிழக்கிற்கு விரைவில் பிற ப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் நியமிக்கப் படுவர் என சாவகச்சேரி பிரதேச செயலாளர் எஸ்.ஶ்ரீநிவாசன் தெரிவித்தார்.

தென்மராட்சிக் கிழக்கிற்கு கடந்த ஒரு வருட காலமாக பிறப்பு. இறப்பு பதிவாளர் ஒருவர் இல்லாமையால் அப்பிரதேச மக்கள் தமது பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற் கொள்ள சாவ கச்சேரி பிரதேச செயலக பதிவாளர் அலுவ லகத்திற்கே செல்ல வேண்டி யுள்ளது.

இது தொடர்பில் கேட்ட போதே சாவகச் சேரி பிரதேச செயலாளர் எஸ். ஶ்ரீநிவாசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது பதில் பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் தென்மராட்சி கிழக்கிற்கு நியமிக்கப் பட்டுள்ள போதும் அப்பதிவாளர் முழு மையாக அங்கு சென்று கடமையாற்ற முடி யாதுள்ளது. எனவே தென்மராட்சி கிழக்கிற்கு விரைவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் அவர் தெரி வித்தார். (5-29)

# உள்ளூராட்சி சபைகளின் ஆதனவரி மறு மதிப்பீடு அடுத்த வருட முற்பகுதியில்

## வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளினது ஆதனவரிகளின் மறுமதிப்பீடு அடுத்த வருடம் முற்பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரி. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

எனவே உள்ளூராட்சி சபைகள் இதற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைகளை துரிதப்படுத் துமாறு சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அக்கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி சபை ரீதியாக வீடு, காணி கள் தனித் தனியாக அட்டவணைப்படுத்தப் பட வேண்டும். தெருக்கள் ரீதியாக ஆதனங் கள் இலக்கமிடப்பட வேண்டும். குடிமதிப் புகளும் செய்யப்படுதல் வேண்டும்.

கடைகள், வீடுகளுடன் கூடிய கடைகள் என்பவற்றின் நீளம், அகலம், உரிமையாளர் பெயர் விபரம் பதிவு செய்யப்படுவதுடன் உத்தேச வியாபார மாதாந்தப் புரள்வு, கிடைக் கக் கூடியலாபம் அனைத்தும் பேரேட்டில் தனித்தனியாக பதிவு செய்ய வேண்டும்.

இவ்வேலைகளைத் துரிதப்படுத்தி உள்ளூ ராட்சி உதவியாளர்கள் தலைமையில் தொழில்நுட்ப அலுவலர் முகாமைத்துவ உதவியாளர்கள், வருமான மேற்பார்வை யாளர்கள் ஆகியோரை உடன் ஈடுபடுத்தி செயல்படுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (5-29)

# காலம் கடந்த 110 பிறப்பு, இறப்பு பதிவுகளுக்கு தீர்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் நேற்று நடைபெற்ற காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள் நடமாடும் சேவையில் 110 காலம் கடந்த பதிவுகளுக்கு தீர்வு காண ப்பட்டதாக பிரதேச செயலாளர் எஸ். ஶ்ரீநிவா சன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலக பதிவாளர் அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் ஏற்கனவே கிடைத்த பதிவுகள் மற்றும் புதிதாக கிடைத்த பதிவுகள் என 110 காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (5)

# நாற்றுக் கன்றுகள் இன்மையால் பயிர் உற்பத்தி செய்வதில் சிக்கல்

## விவசாயிகள் விசனம்

அண்மையில் ஏற்பட்ட கடும் மழை, புயல், காற்று காரணமாக முற்றாக அழிந்து போன விவசாய நிலங்களில் புதிதாக பயிர்களை உற்பத்தி செய்யஆரம்பித்துள்ள விவசா யிகள் நாற்றுக்கன்றுகள் இல்லாமையால் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து புதிய உற்பத்தியை மேற் கொள் வதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஈரலிப் பான செம்மண் நிலங்களில் இயந்திரங் களை இயக்கி உழுது பண்படுத்த முடியாம லுள்ள போதும் மனித வலுவைப் பயன்படுத்தி நிலத்தை பண்படுத்திய விவ சாயிகள், பயிர் செய்கைக்கு தயாரான போது அவற் றுக்கான நாற்றுக் கன்றுகள் கிடைக் காமல் போயுள்ளது.

பெரும்பாலான நாற்று மேடைகள் மழை வெள்ளத்தினால் அழிந்தமையால் நாற்றுக் கன்றுகளுக்கு பெரிதும் தட்டுப்பாடு ஏற் பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின் றனர்.

புகையிலை, தகத்தரி, மிளகாய், தக்காளி போன்ற பல்வேறு வகையான புதிய நாற் றுகளுக்குத் தட்டுப்பாடாக உள்ளமையினால் தோட்டங்களுக்கும் நாற்றுப் பண்ணைகளுக் கும் தாம் அலைந்து திரிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (5)

# சுகாதார முகாமை உதவியாளர் தரம்-III ற்கு யாழ். மாவட்டத்திலிருந்து 42 பேர் தெரிவு

வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத் தியத்துறை அமைச்சினால் புதிதாக நியமனம் செய்யப்படுகின்ற யாழ். மாவட் டத்தினைச் சேர்ந்த 42 சுகாதார முகாமைத்துவ உதவி யாளர்கள் எதிர்வரும் 01.01.2009 ஆம் திகதி திருகோணமலையில் அமைந்துள்ள வடமா காண சுகாதார சேவைகள் பணிமனையில் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொள் ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 42 பேரின் விபரங்கள் வருமாறு :- யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த


ஏ. தர்மினி (கைதடி மேற்கு), ஜி. பிரதீபா காயத்திரி (கொக்குவில் கிழக்கு), கே. பிரேமலதா (நல்லூர்), வி. சஜீவன் (கோப்பாய் தெற்கு), ஆர். அபிராமி (புகையிரத வீதி, சாவகச்சேரி), எம். அனுசானந்தினி (ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை), கே. தர்மினி (வட்டுக்கோட்டை வடக்கு), ரி. கீர்த்தனா (சாவ கச்சேரி வடக்கு), வி. அரவீந்தன் (புலோலி), கே. கேமா (அராலி தெற்கு), கே. கஜேந்தினி (குப்பிளான் வடக்கு), எம். ஜவானரூபி (குப் பிளான் தெற்கு), எஸ். சாரங்கன் (ஏழாலை மேற்கு), எஸ். சைதா (கெருடாவில் தெற்கு), வீ. சுபாஜினி (கொக்குவில் கிழக்கு) ஆர். தீபனா (புகையிரதவீதி, சாவகச்சேரி), ஏ. கார்த்திகா (ஊரேழு மேற்கு), கு. துளசி (கோவில் வீதி, நல்லூர்), வே. கிருஸ்ணாம்பாள் ( மிருசுவில் வடக்கு), த. சுரேக்கா (கொக்குவில் கிழக்கு), கு. மீரா (செம்மணி வீதி, நல்லூர்), சி . நீகன் (கனகசபை வீதி, மானிப்பாய்), கி. மதுமதா (துன்னாலை மேற்கு), வ. ராதிகா (இமையாணன் வடக்கு), சி. விேனாதா (கரவெட்டி மத்தி), சி. தனூஷா (மீசாலை கிழக்கு), சி. ரஜீவன் (ஏழாலை கிழக்கு), கி. பிருந்தாபன் (நெல்லியடி கிழக்கு), யோ. சசிரேகா (கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்), சி. வித்தியதாசன் (மீசாலை கிழக்கு), நி. ஜசிகா (வண்ணார்பண்ணை), க.கிரிதரன் (பரு. வீதி. நல்லூர்), ச. வனஜா (தும்பளை மேற்கு), ந. நேசமீரா (மீசாலை வடக்கு), ஶ்ரீ. பார்த்தீபன் (கோப்பாய் வடக்கு), ந. சுகிதா் (சாவகச்சேரி) ஶ்ரீ. ஶ்ரீபிரியா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), இ. கௌசிகா (அரியாலை, யாழ்ப்பாணம்), செ. சௌமியா (உரும்பிராய் தெற்கு), சி. சிவானந்தன் (உரும்பிராய் தெற்கு), பொ. தாட்சாயினி (கோண்டாவில்), சி. சிவரூபினி (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்). (5)

# மாணவர் வரவுப் பதிவேடுகள் முழுமையாக வந்து சேர்ந்தன

(திருகோணமலை)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு விநி யோகிப்பதற்கென 4ஆயிரம் மாணவர் வர வுப் பதிவேடுகள், ஆசிரியர் கை நூல்கள் மற் றும் படிவங்கள் என்பன கப்பல் மூலம் எடு த்து வரப்பட்டு காங்கேசன்துறை துறை முகத்தில் இறக்கப்படுவதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரி வித்தார்.

ஆசிரியர் கைநூல்கள், மாணவர் வரவுப் பதிவேடுகள் முதல் கட்டமாக முன்னர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தற்போது மிகுதி அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (5)




தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 21 வயது நீளம் பாய்தல் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்று யாழ். மண்ணுக்கு பெருமை தேடித் தந்த உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் குணசிங்கம் கோபிநாத்துடன், உடற்கல்வி ஆசிரியர் ச.செல்வக்குமாரன் (வலதுபுறம்) மற்றும் பயிற்சியாளர் ஜெ.குணாளசாந்தன் (இடதுபுறம்) ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 20

### மக்கள் வருகை

இரு குழுக்களும் ஒரு விஷ யத்தை இட்டு ஒருமைப்பட்ட கருத்தைத் தெரிவித்துள்ளன. அதாவது, ஆபிரிக்காவிலிருந்து புலம் பெயரத்தொடங்கிய ஆதிமனிதர் செங்கடலின் தென்பாகத்தைக் கடந்து, அராபியாவின் தென்கரை வழியாக இந்தியாவின் தென் கரையை அடைந்து, அங்கிருந்து இந்து னீசியா வழியாக ஆஸ்திரேலியா வரை சென் றனர் என்ற முக்கிய முடிபை இக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இது தென்னிந்தியா இலங்கைப் பிராந்தி யத்தைப் பொறுத்த மட்டில் ஒரு முக்கியமான விஷயமாகும். இதை ஏற்றுக்கொண்டால் வட இந்தியப் பிரதேசத்தில் மனிதர் வாழுமுன் தென்னிந்தியா இலங்கப் பிராந்தியத்தில் மனிதர் வாழத் தொடங்கினர் என்பதை ஏற் றுக் கொள்ளலாம். அது மட்டுமன்றி, தென்னிந்தியா இலங் கைப் பிராந்தியத்தில் வாழ்ந்த ஆதி மனிதருக்கும், ஆஸ்தி ரேலியாவின் ஆதி மனிதருக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருப்பது பற்றித் தெரிவிக் கப்பட்ட சில கருத்துக்கள் சரியாக இருக்க லாம் என்று அறிவியல் அடிப்படையில் இப் பொழுது கூற இட முண்டு.

அத்துடன், தென்னிந்தியா இலங் கைப் பிராந்தியத்தின் ஆதிக்குடிகள் ஆபிரிக் காவிலிருந்து நேரடியாகப் புலம்பெயர்ந்து வந்த மனிதர் என்பதையும் இன்று இப் பிராந்தியத்தில் வாழும் மக்களுடைய முதல் முன்னோர்கள் இவர்கள் என்பதையும் இதன் மூலம் வலுப்படுத்தலாம். ஆகவே, இன்று நாம் இந்தியத் துணைக் கண்டம் என்று வர்ணிக்கும் நிலப்பகுதியில் கடந்த 60,000 ஆண்டுக் காலமாக மனிதர் நடமாட்டம் காணப்பட்டது எனலாம். இம் மனிதர் இன் றைய குடிகளின் முன்னோர்கள். இக் காலப் பகுதியின் பெரும்பாகத்தில், அதாவது 85% க்கும் கூடுதலான பாகத்தில், இலங்கை என்று நாம் இன்று வர்ணிக்கும் தீவு மேற் கூறிய நிலப்பகுதியுடன் இணைந்து காணப் பட்டது.

இக்காரணத்தினால், இக் காலத்துக் கண்ணோட்டத்துடன் பல்லாயிரம் ஆண்டுக ளுக்கு முன் நடைபெற்ற மக்கள் வருகையை அணுகுதல் தவறாகும். இன்று இலங்கை வேறு நாடு, இந்தியா வேறு நாடு, அதனால், இன்று நடைபெறும் மனிதர் புலப் பெயர்ச் சியை எடுத்துக் கூறும் போது இந்தியாவிலி ருந்து மக்கள் இலங்கைக்குச் சென்றனர் என் றோ இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்றனர் என்றோ கூறுவது போல், இலங்கை மற்றும் இந்தியா என வேறான நாடுகள் இல்லாத காலத்தைப் பொறுத்து இவ்வாறு கூற முடியாது. இலங்கைத் தீவு இந்திய நிலப்பகு தியிலிருந்து இற்றைக்கு 7000 ஆண்டு களுக்கு முன்புதான் இறுதியாகப் பிரிந்து வேறு நிலப்பகுதியாகியது.

இந்தியத் துணைக்கண்டத்தை வந்த டைந்த மனிதர் மிக நீண்ட காலமாகப் பழைய கற்கால நிலையிலேயே வாழ்ந்தனர். பல் லாயிரம் ஆண்டுகளின் பின் சிந்து சம வெளி எனப் பெயர் பெற்ற இன்றைய பாகிஸ்தான் நிலப்பகுதியில் ஒரு மிக முன்னேற்றமான நாகரிகம் உருவாகியது. இது ஏறத்தாழ இற் றைக்கு 4600 ஆண்டுகளுக்கு முன் தோன் றியது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் இன்று சிந்து வெளி நாகரிகம் எனவும் ஹரப்பா நாகரிகம் எனவும் கூறுவோம்.

இந் நாகரிகம் சிந்து சம வெளியிலிருந்து மேற்கிந்தியாவில் காத்தியவார் வரை பரவிக் காணப்பட்டது. இதன் செல்வாக்குக் கிழக்கிந் தியா வரையோ தென்னிந்தியா வரையோ பரவ வில்லை. எனினும், தென்னிந்தியா வரை சிந்து வெளி வர்த்தகர்கள் சென்று அங்கு வாழ்ந்த பின்தங்கிய மக்களுடன் தொடர்பு கொண்டிருக் கலாம் என்று கொள்ள அண்மையில் தமிழ் நாட்டில் ஒரு முக்கிய சான்று கிடைத் துள்ளது.

### பழைய கற்காலம்

சிந்து வெளி நாகரிகத்தின் காலமளவில் அந் நாகரிகம் பரவாத இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பாகத்தில் பிற்கால இந் திய மக்களின் மூதாதையராகக் கருதப்பட வேண்டிய ஆதிக்குடிகள் பரவலாக வாழ்ந் தனர். இவர்கள் விட்டுச் சென்ற கற்கருவிகளை நோக்கினால், குறிப்பிடத்தக்க முன்னேற் றமின்றி மிக நீண்ட காலமாகப் பழைய கற் கருவிகளைப் பயன்படுத்திக்கொண்டு இவர் கள் துணைக்கண்டனத்தின் பல்வேறு பகுதி களுக்குப் பரவிச் சென்று வாழ்ந்தனர் என் பதை அறியலாம்.

இவர்களுடைய கற்காலப் பண்பாடு உலகின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக மேற்கு ஆசியா, ஐரோப்பா மற்றும் ஆபி ரிக்கா ஆகிய இடங்களில், காணப்பட்ட கற் காலப் பண்பாட்டை ஒத்திருந்தது.

### இடைக்கற்காலம்

இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்கருவிகளின். அமைப்பில் மாற்றம் ஏற்படத் தொடங்கிப் பழைய கற்காலம் முடிவு பெற, இடைக்கற்காலம் தோன்றியது. இக் காலப்பகுதியில் ஏற்பட்ட முன்னேற்றங்களுள் குறிப்பிடத்தக்கது குறுங்கற்களால் ஆக்கப் பட்ட கருவிகள் எனலாம்.

இக்காலத்தில் பெரும் பாலான மக்கள் நாடோடிகளாக வாழ்ந்தாலும், அங்குமிங் குமாகக் குடியிருப்புக்களும் தோன்றியிருந் தன. பல இடங்களில் இக் குடியிருப்புக்களுக்கு அருகே வேட்டையாடுவோர், மீன்பிடிப்போர், இயற்கை அளித்த உண வைத் தேடுவோர் மற்றும் மந்தை மேய்ப்போர் போன்ற நிலை யான குடியிருப்புக்கள் இல்லாதோரும் ஆதி இரும்புக்காலம் தொடங் கும் வரை (அதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரை) பக்கம் பக் கமாக வாழ்ந்தனர்.

### புதிய கற்காலம்

இடைக்கற்காலத்தின் பின் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பாகத்தில் புதிய கற்காலம் தோன்றியது. இக்காலப்பகுதியில் விவசாயமும் மிருக வளர்ப்பும் கூடுதலான முக்கியத்துவம் பெற்றன. இம் முன்னேற் றத்தின் விளைவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்களுடைய வாழ்க்கை புரட்சி கர மாக மாறியது எனலாம். சிறப்பாக பல்வேறு

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இடங்களில் நிலையான குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்ட ஊர்கள் தோன்றுவதற்கு வழிகோலப்பட்டது. வடக்கில் ஸ்வாத் தாழ் நிலம், காஷ்மீர் தாழ் நிலம் மற்றும் பெலான் தாழ்நிலம் ஆகிய இடங்களிலும், தெற்கே கோதாவரித் தாழ்நிலம் மற்றும் கிருஷ்ணா நதித் தாழ்நிலம் ஆகிய இடங்களிலும், முக்கியமான புதிய கற் காலத்துத் தலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் வட பகுதியில் ஒரு சில புதிய கற்காலத்துக்குரிய சான்றுகள் காணப்பட்ட போதும் பொதுவா கத் தூர தென்னிந்தியப் பகுதியில் இத் தகைய சான்றுகள் கிடைக்கவில்லை எனலாம்.

இவ்வாறு துணைக் கண்டத்தின் பல பாகங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ஓர் இனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கொள்ள முடியாது. பல்வேறு காலங்களில் பல்வேறு இனக்குழுக்கள் நாடோடிகளாய்த் துணைக் கண்டத்துக்குச் சென்றனர். காலப்போக்கில் இனக்கலப்பும் ஏற்பட்டது எனலாம். (தொடரும்)

# விசேட கல்வி நடைமுறையும் யாழ். கல்வி வலய செயற்பாடுகளும் 1

இன்று எமது நாட்டில் விசேட கல்விக்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இலங்கையில் தினமும் பிறக்கின்ற குழந்தைகளில் கணிசமான அளவு ஏதோவொரு வகையில் விசேட தேவையுடையவர்களாகக் காணப்படுகின் றனர். இவர்கள் வளர்ந்து பாடசாலைக்கு வரும் போது, அவர்களின் தனித்தன்மை களை இனங்கண்டு அவர்களுக்கேற்ற முறை யில் கல்வியை வழங்கவேண்டிய தேவை யுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு பிள்ளை களினதும் இயலுமை, இயலாமை என்பவற் றை இனங்கண்ட விசேட உதவிச் சேவைக ளுடன் வழங்கப்படும் கல்வி விசேட கல்வி என அழைக்கப்படுகிறது. அந்த வகையில் இலங்கையில் விசேட கல்வி ஐந்து(5) கட்டங் களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

⌘ நிறுவனமயப்படுத்தல்

விசேட தேவையுடையோர் போர்த்துக் கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்தா னியர் காலம் (1912வரை) என மூன்று கால கட்டங்களில் நிறுவனமயப்படுத்தி பராமரிக் கப்பட்டுள்ளனர்.

⌘ விசேட பாடசாலைகள்.

விசேடதேவையுடையோருக்கு உதவிபெறும் விசேட பாடசாலைகளில் கல்வி போதிக்கும் பணி பிரித்தானியரின் காலத்தின் பிற்பகுதியில் ஆரம்பமானது. அந்த வகையிலே ஆரம்பிக் கப்பட்டதே இரத்மலானை விழிப்புலனற்றோர் பாடசாலையும் (1912) மஹவெவ செவிடர் பாடசாலையும் (1935) ஆகும். இன்று இலங் கையில் பதிவு செய்யப்பட்ட 125 விசேட பாடசா லைகள் இயங்குகின்றன.

⌘ பாடசாலையுடன் ஒன்றிணைத்தல்.

1966 இல் ஜீன் கொன்மோர் அறிக்கைக் கமைய 1969 இல் கல்வியமைச்சர் (I.M. R.A.) ஈரியகொல்ல அவர்களால் முன்வைக் கப்பட்ட அமைச்சரவை நிருபத்தின் படி கட்புல னற்ற 17 பிள்ளைகளுக்காக உள்ளடக்கற் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் விசேட கல்வித் துறையில் முழு நேரம் கற்பிக்கும் ஆசிரியருக்கு வேதனத்தில் 10% மேலதிக கொடுப்பனவாகவும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



யாழ். கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிறுவர் முகாம் நிகழ்வு.

⌘ விசேட கல்வி அலகுகள்

1975 இல் செவிப்புலக் குறைபாடுடைய பிள்ளைகளுக்காகவும் 1985இல் நுண்மதிக் குறைபாடுடைய பிள்ளைகளுக்காகவும் பொதுவான பாடசாலைகளில் ''விசேடகல்வி அலகுகள்'' ஆரம்பிக்கப்பட்டன. தற்பொழுது சகல பாடசாலை களிலும் விசேடகல்வி அல குகள் ஆரம்பிப் பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

⌘ உட்படுத்தல் கல்வி

1961 இன் தேசிய கல்வி ஆணைக் குழு வால் (1961 - 1984) 6-14 வயதுக் கிடைப்பட்ட சகல பிள்ளைகளையும் பாடசாலைகளில் சேர் த்தல் வேண்டும் என நிபந்தனை விதிக்கப் பட்டது. 1990 இல் யுனெஸ் கோவின் சிறுவர் உரிமைச் சாசனத்திற்கு அமைய ''அனை வருக்கும் கல்வி'' என்ற கொள்கை எமது நாட் டிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின் 1994 இல் ஸ்பெயின் நாட்டில் "சலமன்ஹா" நகரில் 92 நாடுகள் பங்கு கொண்ட மாநாட் டில் உட்படுத்தல் கல்விக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1997 இன் கட்டாயக் கல்விக் கட்டளைகளுக்கு ஏற்ப 5-14 வயதுக் கிடைப் பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வி வழங் குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (1997 விசேட வர்த்தமானி 10053/3)

இன்று இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு கல்வி வழங்கு வதற்காக உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடை முறைப்படுத் தப்படுவதோடு, விசேட கல்வி அலகுகள், பொதுவாகப் பாடசாலையுடன் ஒன் றிணைத்தல், விசேட பாடசாலைகள் ஆகியன நடைமுறையில் உள்ளன. இவ்வாறாக விசேட கல்விச் செயற்பாடுகள் நடை முறைப் படுத்தப்பட்ட போதிலும் யாழ் மாவட்டத்தில் 2004 வரை விசேட கல்விச் செயற்பாடுகள் அரிதாகவே காணப்பட்டன. 2005 இல் யாழ்ப்பாணம், வலி காமம், வட மராட்சி ஆகிய வலயங்களுக்கு விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக் கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் மாவட்டத் திலும் விசேட கல்வி தொடர் பாக விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியுள்ளது.

தென்மராட்சி, தீவக வலயங் களில் ஆரம் பக் கல்வித் துறை யினரே 2007 வரை விசேட கல்விச் செயற் பாடுகளை முன்னெ டுத்து வந்தனர். 2008 இல் தீவக வலயத் திற்கும் ஆசிரிய ஆலோசகர் நியமிக்கப்

செல்வி. சந்திரிகா நவரத்தினம்
ஆசிரிய ஆலோசகர் (விசேட கல்வி)
யாழ் கல்வி வலயம்

பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத் தில் விசேட கல்விச் செயற் பாடுகள் கூடுதலாக முன்னெடுக்கப்பட்டு வருவதை அறிய முடிகிறது. அந்த வகையில் யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவின் 2008 ஆம் ஆண்டு செயற்பாடுகளை நோக்குவோம். (தொடரும்)

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா'

15

கொடும்பாவி எரித்து கோடி மழை கேட்டதனாலோ மழை ,வெள்ளமாய்ப் பொழிந்து தள்ளியது. வீடுகளுக்குள் மழை புகுந்து கொண்டதனால் உடு புடவைகள் நனைந்த நிலையில், இரவிரவாக விழித்திருந்த வேதனையை அனுபவித்தவர்கள் கூறிய போது, இயற்கை மீது கடும் கோபமே ஏற்பட்டது.

### யாழ். கல்வி வலயத்தில் மாமரம் சரிந்தது

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் வளவில் உள்ள பெரிய மாமரம் "நிஷா" புயலில் சரிந்து போனது.

முகாமைத்துவ மண்டபத்திற்கு முன்பாகவுள்ள இந்த மாமரத்தின் நிழலிலேயே கருத்தரங்கில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் கூடி நின்று தங்கள் கஷ்ட நஷ்டங்களைக் கூறிக்கொள்வர்.

சனி,ஞாயிறு என விடுமுறை நாட்களில் நடைபெறும் கருத்தரங்கின் போது ஆசிரியர்களின் மனக்குமுறல் அந்த மாமரத்தை கடுமையாகத் தாக்கியது போல் "நிஷா" புயலோடு அந்த மரம் சரிந்து போனது.

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகக் கட்டடத்தின் வயோதிபம் கருதி அந்தக் கட்டடத்தின் மேல் முட்டி மோதி விளப்போன மாமரத்தை அதன் அருகில் இருந்த இன்னொரு சோதரம் தாங்கிப் பிடித்துக்கொண்டது.

நேற்று முன்தினம் வலயக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று அந்த மாமரத்தைப்பார்த்தோம்.

வீழ்ந்த மரத்தை தாங்கிய மாமரம் கோபத்தோடு பார்ப்பது போன்று என்னுள் ஒரு பிரமை.

அதேநேரம், அந்த மாமரத்தின் சோகக் குரலும் மெல்ல ஒலித்தது.

அன்பார்ந்த ஆசிரியர்களே, கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களே, உங்கள் குறைகளை எங்கள் நிழலில் நின்று கதைப்பதால் எங்களுக்கும் உள நெருக்கீடு. உங்களின் உபாதைகளால் இதோ பாருங்கள் என்சோதரன் சரிந்து போனான், எனக்கும் அப்படி ஒரு நிலையைத் தந்துவிடாதீர்கள்.

மாமரமா இப்படிப் பேசுகிறது, என்னுள் எழுந்த கேள்விக்கு, "மரங்களும் அழுகின்றன'' என்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புப் பதிலாக அமைந்தது.

மாமரத்தின் விழுகையால் ஓடுகள் உடைந்து போனதில் வலயக் கல்விப் பணிமனையின் கணனிப் பிரிவு பாதிப்படைந்தது. அவற்றை நிவர்த்திக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கல்விப்பணிமனைக்குச் சென்ற கருமத்தை முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மனமுவர்ந்து செய்து தந்தார். திருப்தியோடு வெளியே வந்த போது விழுந்த மரத்தைத் தாங்கி நிற்கும் மாமரம் மீண்டும் பேசியது.

உதவி செய்யும் உள்ளங்கள் இருப்பதால் தான் நாங்கள் விழுந்த வர்கமையும் தாங்கி நிமிர்ந்து நிற்கிறோம்.

மாமரத்தின் தத்துவம், மனிதர்களுக்கும் பொருந்தும் என்ற நினைப்போடு ,"நிஷா" பதிவைத் தேடிப் பயணத்தைத் தொடர்ந்தோம்.

## தரைமேல் நடக்க வைத்தாய் இறைவா ! எம்மை தண்ணீரில் மிதக்க வைத்தாய்



படம்:-ப.ஐங்கரன்-காரைநகர்

### திருவாவடுதுறை கிராமம் பாதிப்பு

"திருவாவடுதுறை கிராமம்'' பலருக்குத் தெரியாத பெயர்.

இந்துக்கலாசார அமைச்சராக காலஞ்சென்ற தி.மகேஸ்வரன் இருந்த போது கல்லுண்டாய் வெளிப் பகுதியில் இக் கிராமம் அமைக்கப் பட்டது.

திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது அவரின் வருகையை கௌரவிக்கும் வகையில் இதற்குத் திருவாவடுதுறை கிராமம் எனப்பெயர் சூட்டப்பட்டது.

மாதிரிக்கிராமமாக பதினொரு கல்வீடுகள் கட்டப்பட்டு அதில் மக்களும் குடியமர்த்தப்பட்டனர். இருந்தும், அசாதாரண சூழ்நிலையால் அந்த வீடுகளில் இருந்தவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தற்போது வீசிய நிஷாப் புயல் அந்த வீடுகளின் கூரைகளைப் பிரித்து விட்டது.



படம் :ஸ்ரூடியோ விஜேந்திரா-மீசாலை

இதனால் அந்த வீடுகள் சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு அமைக்கப்பட்ட இந்த வீடுகளைக் காப்பாற்றுவது யார்?

வீடுகள் திருத்தப்படாமல் விடப்படுமாயின் அவை முற்றாகச் சேத மடைவதோடு மட்டுமன்றி திருவாவடுதுறை கிராமமும் இல்லாமல் போய் விடும்.

எனவே,இந்தப்பகுதியின் பிரதேச செயலகம் குறித்த வீடுகளைப் பராமரிப்பதாலும், அதிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனால் அமைக்கப்பட்ட இந்தக் கிராமம் நிஷா மழையோடும் புயலோடும் அழிந்து போவதைத் தடுப்பது கட்டாயமானதாகும்.

### மரப்பலகையில் பயணம்

எங்கும் வெள்ளம் பெருகியதால் ,உடனடியாகவே கட்டுமரங்கள் தயார் செய்யப்பட்டன. வீடுகளில் கிடைத்த மிதக்கும் பலகைகளை இணைத்து தயாரிக்கப் பட்ட கட்டு மரங்களில் பயணம் தொடங்கியது.

வெள்ளத்தால் ஏற்பட்ட இ[illegible] பெயர்வு, பொருள் அழிவு எ[illegible] வற்றின் மத்தியில் நடந்து திரிந்த இடத்தில் கட்டுமரம் கட்டி தடியால் ஊன்றி ,வெள்ளத்தில் பயணித்த போது தம்மை அறியாத சிரிப்பும் பலருக்கு ஏற்படவே செய்தது.

இதில் சில ஆலயங்கள் வெள்ளத்தில் சிக்கியபோது ஆலய அர்ச்சகர்கள் கட்டுமரத்தில் சென்று பூசை நடத்தி விட்டு திரும்பிய சம்பவங்களும் உண்டு.

**என்.விஜயன்**



படம்:-ஐங்கரன்

எவ்வளவு தான் வெள்ளம் வந்தாலும் எங்கள் இறைவழி பாட்டை-நித்திய பூசையை கைவிடமாட்டோம். என்ற வைராக்கிய பக்திக்கு இதை விட வேறு ஆதாரங்கள் தேவையே இல்லை.

(வளரும்)

## வேதாந்த மடத்தில் திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் வேதாந்த மடத்தில் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெற உள்ளது. அடியார்கள் இந்நிகழ்வில் கலந்து பயன் பெறுமாறு மடத்தின் பீடாதிபதி கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோவிலில் நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 8 ஆம் திருமுறையான திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றின் முற்றோதல் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ஓ)

## அதிபர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

2009 ஆம் ஆண்டிற்கான பாடசாலை செயற்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தற் செயலமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கணனிவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வுக்கு அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் வருகை தரும் அதிபர்கள் தர உள்ளீடு உயர்கல்வி செயற்பாடுகள் தொடர்பான டிசம்பர் 2008 வரையான காலப் பகுதிக்குரிய செலவுக் கூற்றுக்குரிய இரு படிவங்களை பூர்த்தி செய்தும் 2009 ஆம் ஆண்டு தரம் 10 இல் கற்கும் மாணவர் விபரங்களை பாடரீதியாகவும் வகுப்பு ரீதியாகவும் கொண்டு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-6-19)

## சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் திருட்டு

யாழ் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள வியாபார நிலைய ஊழியர்களின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊழியர் ஒருவரின் சைக்கிள் திருட்டு போயுள்ளது.

முன்னர் பகல் இரவு நேரங்களுக்கும் காவலாளி நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது பகல் கடமை நிறுத்தப்பட்டதன் பின்னர் சில மாதங்களில் பல சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-36)

## சிறந்த சனசமூக நிலையமாக தெரிவு

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையம் வலி தென் மேற்கு பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள (84) எண்பத்து நான்கு சனசமூக நிலையங்களுள் 2008 ஆம் ஆண்டுக்கான சிறந்த சனசமூக நிலையமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அண்மையில் பிரதேச சபைக் க...லாசார மட்டத்தில் உள்ளூராட்சி வார விழாவின் போது மானிப்பாய் பொது வைத்திய அதிகாரி டினேஷ் ஜெயக்குமாரினால் நிலையத் தலைவர் சி.அருள் நேசராசாவிடம் பரிசில்கள் வழங்கப்பட்டது. (ஓ)

# மாகாண முகாமை உதவியாளர் சேவைக்கு மேலும் 55 பேர் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் 08.12.2007 இல் நடத்தப்பட்ட முகாமை உதவியாளர் சேவை தரம் 3க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை பெறுபேற்றிற்கமைய மேலும் 55 பேர் திருகோணமலையில் உள்ள திணைக்கள தலைமையகங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி திருகோணமலையில் உள்ள மாகாண பொது நிர்வாக செயலகத்தில் தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இவர்கள் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டமை தொடர்பான கடிதங்களை பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் வந்து பெற்று கொள்ளுமாறும் பிராந்திய ஆணையாளர் கேட்டுக் கொள்கிறார்.

இப் பெயர்ப்பட்டியல் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதால் தெரிவு செய்யப்பட்டோர் திருகோணமலைக்குச் செல்வதற்கான கப்பல் ஒழுங்குகளை அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

ஸ்ரீ. சுரேந்திரன். ஜெயச்சந்திரன்-அரசடி ஒழுங்கை இருபாலை, செல்வரத்தினம் சுமித்தா- ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, தங்கராஜா குமார்-வல்லை வீதி தொண்டமானாறு, வாமனன் வைத்தீஸ்வரன் -டாக்டர் சுப்பிரமணியம் வீதி சுன்னாகம், இந்திரராஜா கதிர்காமினி- தம்பசிட்டி, பருத்தித்துறை, இரட்ணசிங்கம் சுதாகரன்- புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

சற்குண ராஜா பிருந்தி- சரசாலை தெற்கு, இராசையா கார்த்திகா- நீர்வேலி வடக்கு, சுமன் உமா ஜோதினி-முதலாம் ஒழுங்கை, கற்குழி, சாவகச்சேரி, திருநாவுக்கரசு தயாபரன்- பயிரிக்கூடல், காரைநகர், இராஜதுரை தர்சினி-கரவெட்டி கிழக்கு, செல்வராஜா அருணன்- கோப்பாய் வடக்கு, கணேசரட்ணம் ஜெயவாணி- துன்னாலை வடக்கு. விக்டர் சுரேஸ்ஜெனிஷா-ஆனைக் கோட்டை, சிங்கராஜா நிஷாந்தன் -தாவடி தெற்கு, வேலும் மயிலும் சக்திதேவி- மாதகல் கிழக்கு, சந்திரபோஸ் துவாரகா - சம்பியன் லேன், கொக்குவில், நவரட்ணம் நவதாஸன்- வரணி, சச்சிதானந்தன் தமிழன்பன்-பருத் தித்துறை வீதி, கல்வியங்காடு.

மகேஸ்வரன் கார்த்திகா- அல்வாய் தெற்கு, சுந்தரகாந்தன் வைதேகி-உரும்பிராய் வடக்கு, நவரட்ணம் சஞ்சீவ்- மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம், நடராஜன் சுவிந்தன் -க ச்சாய் வீதி, சாவகச்சேரி, கிருஷ் ணசாமி நிஷாந்தினி- மந்துவில் வடக்கு, கொடிகாமம், அன்ரன் கிறைசிஸ் மேரி அனித்தா- நெல்லியடி, வி. விவேகானந்தன்- நிரஞ்சினி- அல்வாய் மேற்கு, அல்வாய், குலசிங்கம் தயாளினி - சுன்னாகம், சிவசுப்பிரமணியம் ஹேமகலா- புத்தூர் மேற்கு, கிருஷ்ணன் பிரபாங்கனி- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, சகாதேவன் தேனுதயா- அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயசுந்தரேஸ்வரா சந்திரபாலு- கொக்குவில் மேற்கு , மகேந்திரன் - அபிராமி - நாவலர் வீதி, யாழ்ப் பாணம், யோகேஸ்வரன் நிமலன் - கோண்டாவில், வன்னியசிங்கம் சுகிதரன் - ஆனைக்கோட்டை, சண்முகநாதன் நிரோசிகன் - கொக்குவில் கிழக்கு, சின்னராஜா விமலன்- அல்வாய், இராமசாமி வாசுகி - கொக்குவில் மேற்கு, ஸ்ரீபராபரன் தயாபரம் - அச்சுவேலி, ஸ்ரீபதரேகா - மானிப்பாய், திருரட்ணம் மலர்விழி - வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.ராஜேந்திரம் மேரி நித்தியா - கல்வியங் காடு, சிவகெங்காதரன் திகழ்மதி - வட்டுக்கோட்டை, செபஸ்ரியாம்பிள்ளை மிகாயா தர்சினி - சுண்டுக்குளி, தங்கராஜா ராஜினி - பண்டத்தரிப்பு, சிவராஜா காஞ்சனா - மணிக் கூட்டு வீதி, யாழ்ப் ்பாணம், சின்னராஜா ரஜீபன் - ஏழாலை கிழக்கு.

சந்திரகுமார் பிரிந்தா - உடுவில் கிழக்கு, சுரேந்திரர் புஸ்பலிங்கம் - வல்வெட்டித்துறை, சிவஞானசேகரம் அம்பிகாபதி - நவாலி தெற்கு,சின்னராஜா செந்தூரன் - கந்த ரோடை மேற்கு, சண்முகசுந்தரம் இளங்கீரன் - கரவெட்டி, தில்லை நாதன் ஜசீதரன் - நவாலி தெற்கு, த. கபிதா - ஏழாலை மேற்கு, ஜெயகௌரி ராஜரட்ணம் - கோண்டாவில் கிழக்கு, காசிப் பிள்ளை சத்தியரஞ்ஜினி - அரியாலை மேற்கு. (ஓ-6)

## சுய விபரக் கோவை தயாரிக்க ஆவணங்களை சமர்ப்பிக்கவும்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிற்கு அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான சுய விபரக் கோவை தயாரிக்கப்படவுள்ளதால்,

பின்வரும் ஆவணங்களை சாவகச்சேரியில் அமைந்துள்ள தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்துதவுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் கேட்டுக் கொள்கின்றார். சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் வருமாறு,

நியமனக் கடிதம் - 3 பிரதிகள், பிறப்புச் சான்றிதழ் - 2 முலப் பிரதிகள், கல்வித் தகைமைச் சான்றிதழ் - மூலப் பிரதியுடன் 2 பிரதிகள், குணச் சான்றிதழ் - 2 அவற்றில் ஒன்று அவர்களது பிரிவு கிராம அலுவலரிடம் பெற்றது,

திருமணச் சான்றிதழ் - 2 மூலப் பிரதிகள் வீதம் கணவன் அல்லது மனைவி மற்றும் பிள்ளைகளினதும் தேசிய அடையாள அட்டை - 2 பிரதிகள், கணவன் அல்லது மனைவியின் தேசிய அடையாள அட்டை 2 பிரதிகள்,

இதில் கைதடி நாவற்குழி ஆகிய பிரதேச பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும், ஏனைய பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கும் மேற்கூறப்பட்ட சகல ஆவணங்களுடனும் சமூகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-29)

## மாணவர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் சங்கானைக் கல்விக் கோட்ட பிரிவிலுள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை 2008 இல் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் தேசிய ரீதியில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடம் பெற்ற மாணவன் ஆகியோரை பாராட்டி பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வலி - மேற்கு பிரதேச செயலர் திருமதி. தே. பாபு, யாழ். ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் பே. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (ஓ-4)

## வேம்படி பாடசாலை மாணவிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி பயிலும் 10 ஆம் ஆண்டும் அதற்கு மேற்பட்ட வகுப்பு மாணவிகள் அனைவரையும் பாடசாலை சீருடையில் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## வரவு செலவுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் உப அலு வலகங்களிலும் இன்று புதன்கிழமை முதல் 30 ஆம் திகதி வரை பொது மக்கள் பார் வைக்காக வைக்கப்பட்டுள்ளது என பிரதேச சபை செயலாளர் திருமதி. பு. சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)


சாவகச்சேரி டச்சுவீதி புலேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வு 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் முன்றலில் உள்ள தென்மராட்சி கலாசார கலை மன்றத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக யாழ். அரச அதிபர் க. கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-29)






சர்வதேச மருத்துவக் குழுவினால் (MTI) பருத்தித்துறை வைத்தியசாலையில் 23 மருத்துவ துறைசார் ஊழியர்களுக்கு அவசர மருத்துவ நிலைமைகளில் நோயாளிகளைப் பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுதல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் அம்புலன்ஸ் சாரதிகள், தாதியர்கள் போன்றோர் பங்குபற்றி பயிற்சியில் ஈடுபடுவதை படங்களில் காணலாம்.




கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்ட "குடும்ப உறவுகள்" நூல் வெளியீட்டு விழாவில் வைத்திய கலாநிதி சி.எஸ்.நச்சினார்க்கினியன் நூல் விமர்சன உரையாற்றுவதையும், நூலாசிரியர் வைத்தீஸ்வரன் சமூக ஜோதி ச.இலகுப்பிள்ளையால் மாலைசூட்டிக்கௌரவிக்கப்படுவதையும் அருகில் நிற்பதையும்,விழா மேடையில் வைத்தியகலாநிதி சி.அனுஷ்யந்தன், வைத்தியகலாநிதி சி.எஸ்.நச்சினார்க்கினியன், பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் எஸ்.ஜே.யோகராஜன், சட்டத்தரணி கோ.தேவராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## நாட்டில் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 4 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு முதல் கட்டமாக நாட்டில் 10 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் பதிலமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முதல் கட்டமாக எதிர்வரும் 26ஆம் திகதி ஹம்பாந்தோட்டை, கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தலா 2 கோபுரங்களும் மாத்தறையில் 3 கோபுரங்களும் புத்தளத்தில் ஒரு கோபுரமும் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன இக்கோபு ரங் களின் ஊடாக சைரன் ஒலிஎழுப்பி மக்களுக்கு முன்னெச்சரிக்கை மற்றும் முன்னறிவித்தல்கள் வழங்க முடியும்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் துரித நடவடிக்கை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதோடு இதனூடாக முன்னெச்சரிக்கை கோபுரங்களுக்கு சமிக்ஞைகளை அனுப்பி மக்களை அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை இந்த வருட முடிவுக்குள் மேலும் 15 முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

## சர்வகட்சிக் குழுவின் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சர்வகட்சிக் குழுவின் கூட்டம் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் நேற்று செவ்வாய்க்கிழமையும் சர்வகட்சிக் குழுவின் கூட்டம் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளமையினாலேயே சர்வகட்சிக்குழு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக கட்சியின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சிக் குழுவின் 100 ஆவது கூட்டம் நேற்று முன்தினம் மாலையும் 101 ஆவது கூட்டம் நேற்றும் நடைபெறும் எனவும் அத்துடன் இரு நாள் கூட்டங்களுடன் குழுவின் பணி நிறைவு பெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சிக் குழுவில் வடக்கு- கிழக்குக்கான அடிமட்ட அதிகாரப்பகிர்வு, முஸ்லிம், மலையக மக்களுக்கான தனி அலகு என்பவை குறித்து ஆராயப்பட்டதே தவிர அரசாங்கத்தின் தன்மை, அதிகாரப் பரவலாக் கலின் தன்மை குறித்து எதுவும் ஆராயப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## இலங்கைத் தமிழர்களை இரண்டாந்தர குடிமக்களாக நடத்துகிறது மஹிந்த அரசு

(கொழும்பு)

இலங்கைத்தமிழர்களை மஹிந்த அரசு இரண்டாந்தர குடிமக்களாகவே நடத்துகிறது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அதிருப்திப்பிரிவின் தலைவர் மங்கள சமரவீர குற்றஞ் சாட்டியுள்ளார்.

மாத்தாளையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மங்கள சமரவீர பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை மத ரீதியாக மஹிந்த அரசு பிளவுபடுத்தி வருகிறது என்றும் மங்கள சமர வீர கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ர்வூக்ஹக்கீம் நாடாளுமன்றத்தின் பொதுக்கணக்குகளுக்கான குழு வின் தலைவராக இருந்த போது உள்நாட்டுத் திணைக்களத்தின் மீது பாரிய விசாரணைகளை நடத்தினோம்.

உள்நாட்டு திணைக்கள ஆணையாளரை நீக்க வேண்டும் என்று பருந்துரைத்தோம்.

ஆனால், மஹிந்த அமைச்சரவை அதனை ஏற்காமல் என்னை சித்திரவதை செய்தது. அதனால்த்தான் அரசாங்கத்தில் இருந்து வெளியேறினோம் என்றார். (ஓ-5)

## இலங்கை பயணத்தை தவிர்க்குமாறு குடிமக்களுக்கு அவுஸ்திரேலியா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு தமது நாட்டு குடி மக்கள் யாரும் பயணம் மேற் கொள்ள வேண்டாம் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியல் ரீதியான வன் முறைகள் நடை பெற்று வருவதால் இலங்கை சுற்றுலாத் தலங்களுக்கான பயணத்தைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பாலி, தாய்லாந்து மற்றும் இந்தியாஆகியவற்றுக்குச் செல்வதும் அபாய கரமானது என்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-5)


### பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அ. அன்ரனி ராஜன்



மலர்வு
28.09.1974

உதிர்வு
24.12.1996

பன்னிரண்டு ஆண்டு ஆனதுவே தம்பி
பதறுகிறோம் பாரினிலே யாம்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகிறோம்!

நாரந்தனை தெற்கு
(ஊர்காவற்றுறை)

சகோதரி
சோக்கா
மானிப்பாய்

2018


## வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை

### இஞ்சி

Botanical Name - Zingiber officinale
Family- Zingiberaceae
Engl - Ginger
Sinh - Inguru



ஒரு மீற்றர் உயரம் வளரக்கூடிய பல பருவ குறுஞ்செடி. தண்டு தரைக்கீழ் தண்டாகும். இலைகள் ஈட்டிவடிவின. நடு நரம்பு பெரியது- நடுப்பள்ளம் கொண்டது. ஒரு போக்கு நரம்பமைப்பு கொண்டது. மலர்களின் காம்பு குட்டையானது. மஞ்சரியாக அமைந்தவை பூவிதழ்கள் வெண்மை அல்லது மஞ்சள் வண்ணங் கொண்டவை.

**பரம்பலும், இனவிருத்தியும்**

வெப்பமான இடங்களில் கிழங்காக பயிரிடலாம். தொட்டிகளில்/ பாத்திகளில் பயிரிட ஏற்றது. அதிகம் மணல் கலந்த மண்ணிலே நன்கு பயிராகும். தழைச்சத்தும், சுண்ணாம்புச் சத்தும் பெருமளவு உள்ள மண்ணே இதன் வளர்ச்சிக்கு ஏற்றதாகும். இஞ்சி பயிரிடப்படும் மண் நல்ல வடிகால் வசதி பெற்றதாக இருக்க வேண்டும். நீர் தேங்கியிருக்குமானால் இஞ்சிக் கிழங்குகள் அழுகி வீணாகிவிடும். தரையடித்தண்டு/ நிலக்கீழ்த்தண்டு மூலம் இனவிருத்தி செய்யலாம். தரையடித்தண்டை மண்ணில் புதைத்து வைத்தால் மிகவும் குறுகிய காலத்திலேயே கொப்புக்கொப்பாக கிளைத்து வளரத் தொடங்கும். பத்து மாதம் வளர்ந்த தாவரங்கள் பிடுங்கி எடுக்கப்பட்டு தரையடித் தண்டுகள் சேகரிக்கப்படுகின்றன.

**மருத்துவப்பயன்கள்**

*மிஞ்சும் நோயெல்லாம் வஞ்சமில்லாமல் தடுக்கும் இஞ்சி*

பிறந்த குழந்தைகளில் இருந்து முதியோர் வரை பலருக்கும் ஏற்படும் பற்பல நோய்களை நீக்கும் மருத்துவ குணமுள்ளது இஞ்சியாகும். இஞ்சியை எப்போதும் தோலை நீக்கிய பின்பே பயன்படுத்தவேண்டும்.

✠ இஞ்சியை இடித்துச் சாறு எடுத்து சூடாக்கி தலையில் நெற்றி பொட்டில் தேய்த்து சிறிது நேரம் அப்படியே இருந்து பின் குளிக்கலாம். இதனால் தலைப்பாரம், நீரேற்றம் இவை குண மாகும்.

✠ வாரத்திற்கு ஒரு முறை குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை, இஞ்சியையும், வெள்ளைப் பூண்டையும் இடித்து சாறு பிழிந்து வடிகட்டிச் சாப்பிடவேண்டும். குழந் தைகட்கு இரண்டு தேக்கரண்டியும், சிறுவர்கட்கு 25 மில்லி அளவும் முதியவர்கள் 50 முதல் 100 மில்லி அளவும் இச்சாற்றை சாப்பிடலாம். இப்படிச் சாப்பிடுவதனால் பலவகை நோய் கள் வராமல் தடுக்க உதவும்.

✠ இஞ்சியை இடித்து சாறு எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு வைத்து விட வேண்டும். சிறிது நேரத்தில் நீர் தெளிந்து நிற்கும். அப்படி தெளிந்த நீரை மட்டும் தனியாக 50 மில்லி அளவு எடுத்து அதோடு ஒரு எலுமிச் சம் பழச்சாற்றையும் கலந்து கொள்ள வேண்டும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

இதை அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 7 நாட்கள் அருந்தினால் எல்லாவித பித்த நோய்களும் குணமாகிவிடும். குடல் சம்பந்தமான நோய்கள், வாந்தி, சீரணக் கோளாறுகள், பசியின்மை, தலைச்சுற்றல், மயக்கம் ஆகியவற்றைப்போக்கும்.

✠ இஞ்சியை மென்றுதின்றால் குரல் கம்மல், தொண்டைப் புண் சரியாகி விடும்.

✠ சின்ன வெங்காயச்சாறும் இஞ்சிச் சாறும் கலந்து அருந்தினால் குமட்டல், வாந்தி நின்று விடும்.

✠ 100மில்லி பசுப்பால், 150 மில்லி இஞ்சிச்சாறு, 50 கிராம் கற்கண்டு இவைகளைக் கலந்து காய்ச்ச வேண்டும் இதை இரு தேக்கரண்டி அளவு எடுத்து குளிர்ந்த நீரில் கலந்து அருந்த வேண்டும். இதனால் பித்தமயக்கம் குணமாகிவிடும்.

(தொடரும்)

எதுவும் தானாக வருவதில்லை; நல்லது எதுவும் நிச்சயமாக வருவதில்லை; எல்லாவற்றையும் நாமே கொண்டுவரவேண்டும்!

*~ வி.பர்ட்டன்*

# வலம்புரி

## உயிரழிவைத் தடுக்க ஒரே வழி சமாதானமே!

வன்னியில் இடம்பெறும் யுத்தத்தினால் மனித உயிர்கள் அநியாயமாக அழிந்து கொண்டிருக்கின்றன.

எந்தத் தரப்பில் மனித அழிவு ஏற்படுகின்றதென்பதெல்லாம் தேவையற்றவை.

இலங்கை மக்கள் அழிகிறார்கள். எதற்காக இத்தகைய அழிவுகள்? ஒரே நாடு. அந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வகையாடல் அதற்கு மேலாக மதம், மொழி,இனம் என்ற பேதமைகள்.

இதனால் மனித அழிவுகள்,சோகங்கள், கண்ணீர்த் துயரங்கள்.

எத்தனை முயற்சிகள் எடுத்தும் யுத்தத்தை நிறுத்த முடியவில்லையெனில் எங்கோ தவறு நடக்கின்றது.

அந்தத் தவறைக் கண்டறியவேண்டும். இல்லையேல் யுத்தம் நீண்டு செல்வதும் மனித உயிர்கள் அழிவதும் தவிர்க்க முடியாததாகி விடும்.

இருந்தும் இலங்கையின் துரதிர்ஷ்டம் யுத்தம் நடத்தும் அரசுகளே ஆட்சிப் பீடம் ஏறுவதாகும்.

எனக்கு, எனது குடும்பத்திற்கு எதுவும் இல்லை என்றவரை யுத்தத்தால் ஏற்படும் அழிவுகள் பற்றி எவருமே சிந்திக்கத் தயாரில்லை.

இலங்கை சமயப்பற்றுள்ள நாடு எனக் கூறிக்கொள்கின்றோம். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என எல்லாச் சமயங்களும் கொல்லாமை பற்றிப் பேசுகின்றன.

ஆனால் இங்கு நடப்பதோ கொலைகள். அப்படியானால் சமய சிந்தனைகள், தெய்வீக நினைப்புகள் ஏதேனும் நாட்டில் உண்டா? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

உலக நாடுகளில் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள நாடு இலங்கை.

ஆண்டு ஒன்று தொடக்கம் பதினொன்றுவரை சமயம் பொதுக் கல்வியாக அமுல் படுத்தப்படுகிறது.

இதற்கு மேலாக திரிபுடகம், வேத இதிகாசங்கள், திருக்குர்ரான், பைபிள் என்ற அற நூல்களின் போதனைகள்.

இத்தனைக்கும் மத்தியில் வன்னியில் கொடிய யுத்தம் நடக்கிறது.

யுத்தம் நடப்பது அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமானது. இரு தரப்பும் ஆயுதம் தரித்தவர்கள் என்று கூறி யுத்தத்தை நியாயப்படுத்த யாரேனும் முற்படுவார்களாயின்; வன்னியில் இடம்பெறும் யுத்தத்தால் பொது மக்கள் எவரும் பாதிக்கப்படவில்லையா? என்ற கேள்விக்கு அவர்கள் பதிலளிக்கவேண்டும்.

எறிகணை வீச்சுக்கள், விமானத் தாக்குதல்கள் போன்றவற்றால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலியாகி -படுகாயமடைந்து - இடம்பெயர்ந்து அல்லலுறும் அவலம் குறித்து ஆட்சியாளர்கள் கவனமெடுப்பது நீதியல்லவா?

யுத்தம் எதற்கானதாயினும் அதில் தர்மம் இருக்கவேண்டும்.

பொதுமக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற கண்ணீர் இலங்கைத் திருநாட்டை உய்ய விடாது.

எனவே இந்தப் பாவகாரியத்திலிருந்து உடனடியாக விடுபடுவதற்கும் மனித உயிர்கள் அழிவதைத் தடுப்பதற்கும் இருக்கக் கூடிய ஒரே வழி சமாதானமே.

சமாதானம் எல்லோரையும் நிம்மதியாக - மகிழ்வாக வாழ வைக்கும்.

அந்த நிம்மதியையும், மகிழ்வையும் ஏற்படுத்துவதே இறைவனுக்கு மனித குலம் செய்யும் மகத்தான நன்றியாகும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில், 'தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி', 'தொழிலாளர் கல்வி டிப்ளோமா' கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சான்றிதழ்களை வழங்குவார். சான்றிதழ் கற்கைநெறி மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளில் சித்தியடைந்தோரின் விபரம் வருமாறு;

**சான்றிதழ் கற்கைநெறி**

என்.கணேசமூர்த்தி,எஸ்.சிவபாலச்சந்திரன்,எஸ்.சிவகரன், எஸ்.சுப்பிரமணியம்,எம்.விவேகானந்தம்,ஆர்.யோகநாதன், பி.பாஸ்கரன்,கே.ஜெயக்குமார்,எஸ்.இராசநாயகம்,எம்.சதானந்தம்,எஸ்.அமிர்தகடேஸ்வரன்,எஸ்.கொன்சல்ரா,ரி.லிங்கேஸ்வரா,கே.இராஜேஸ்வரி,ஏ.தவமணி,என்.இலங்கேஸ்வரன், கே.கனகசபை,ரி.ரங்கநாதன்.எஸ்.சிவலோகநாதன்,எஸ்.சிவசெந்தூரன்,கே.சிறீமேனன்,ஜே.பவானி,என்.ஜெயராஜ், எம்.சிம்சன்,ஏ.சுதர்சினி,எஸ்.தவரட்ணசிங்கம்,ஜீ.திருக்குமார், வி.சுந்தரம்,ஏ.பிரியந்தி,எஸ்.கோகுலதாஸ்,வீ.லலிதாதேவி, எஸ்.மேரிநெயோனின்,ஏ.நந்தினி,ஜீ.பேராதரன்,பீ.ரமேஸ், எஸ்.சிவகுமார்,ஆர்.திலிபன்,என்.விஸ்வரூபன்,எஸ்.சுபாஜினி, பி.துசாந்தி.

**டிப்ளோமா கற்கைநெறி**

வீ.அழகதரை,என்.கணேசமூர்த்தி,ரீ.குகனேஸ்,கே.ஜெகதீஸ்வரன்,எஸ்.கனகசபை,எஸ்.மோகனமுரளி,ரீ.பன்னீர்செல்வம், கே.இராஜசேகரம்,ஏ.ரனிக்காந்தன்,கே.சின்னையா,எ.சிவபாலச்சந்திரன்,வை.சிவஞானச்செல்வன்,எஸ்.சிவராஜகுமார், கே.சுரேந்திரன்,வை.தருமநாதன்,பீ.தவபாதம்,கே.கனகராஜா.

(ச)

## விழிப்புலனற்ற தமிழ் பேசும் முதலாவது சட்டத்தரணி



மாதகல் நுணசையைச் சேர்ந்த அல்போன்ஸ் ஸ்ரனிஸ் அற்புதராஜ், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் கடந்த 16ஆம் திகதி செவ்வாயன்று சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

விழிப்புலனற்ற இவர், இலங்கையில் கண் பார்வையற்ற தமிழ்பேசும் முதலாவது சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது.

(ச)

## பட்டதாரி ஆசிரியர்களுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலைகளுக்கான பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய நேர்முகப்பரீட்சை இம்மாதம் 29ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில் யாழ்.குடாநாட்டில் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை தொடர்பு கொண்டு மேற்படி நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும் போது அதில் கலந்து கொள்வதில் தமக்குள்ள சிரமங்கள் குறித்து எடுத்துக் கூறியதற்கு இணங்க யாழ்.குடாநாட்டு பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துவது தொடர்பில் கல்வி அமைச்சுடன் கலந்துரையாடுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இம்மாதம் 29ஆம் திகதி நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ள யாழ்.குடாநாட்டு பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.அமைச்சு அலுவலகத்திற்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர்.

(ச)

## யாழ்.கல்வி வலயத்தில் திட்டமிடல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. சகல பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்,உதவிக்கல்விப்பணிப்பாளர்கள்,கோட்டக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ச)

## காரைநகர் பகுதி ஓய்வூதியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணி மனையில் ஓய்வூதியம் பெறுகின்ற அனை த்து ஓய்வூதியர்களுக்கும் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஓய்வூதியம் பெறுவோர் குடியியல் நிலை மீளாய்வு விண்ணப்பப்படி வத்தை, இதுவரை சமர்பிக்காதவர்கள் எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத் திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். உரிய காலத்தில் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாவும் 2009 ஜனவரி தொடக்கம் நிறுத்தி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## சமுர்த்தி முகாமையாளர்கள் அமைச்சருடன் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை, யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தோவானந்தாவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தோவானந்தாவை சமுர்த்தி முகாமையாளர்கள் நேற்று அவரின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அப்பரீட்சையை நடத்துவதற்குரிய சாத்தியப்பாடுகள் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துடன் இன்று கலந்துரையாடப்படவுள்ளது.

எனவே வினைதிறன் தடைதாண்டல் பரீட்சைக்குத்தோற்றும் சமுர்த்தி முகாமையாளர்களை இன்றுகாலை 10மணிக்கு அமைச்சரின் யாழ்.அலுவலகத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி
## பலவீனமே மரணம்



வலிமைதான் நமக்கு வாழ்க்கையில் மிகவும் தேவை. பாவம் , துன்பம் என்றெல்லாம் சொல்கிறோமே அவற்றின் ஒரே காரணம் பல வீனம் தான். பல வீனத்தால் அறியாமை ஏற்படுகிறது. அறியாமையால் துன்பம் விளைகிறது. அந்த வழிபாடு நமக்கு வலிமை தரும். அப்போது துன்பங்களைக் கண்டு சிரிப்போம் ,தீமைகள் கொடுமைகளைக் கண்டு புன் முறுவல் பூப்போம் , பயங்கரப் புலியின் இயல்பின் பின்னாலும் ஆன்மா இருப்ப தைக் காண்போம். இது தான் பலன்.


என் வாலிப நண்பர்களே ,வலிமை பெறுங்கள். இதுவே நான் உங்களுக்குக் கூறும் அறிவுரை. நீங்கள் கீதையைப் படிப்பதைவிட கால் பந்தாடுவதன் மூலம் சொர்க்கத்திற்கு மிக அருகில் செல்ல முடியும். இவை தைரியமான வார்த்தைகள் இருப்பினும் இவற்றை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஏனெனில், நான் உங்களை நேசிக்கிறேன். பிரச்சினை எங்கு என்பது எனக்குத் தெரியும் எனக்குக் கொஞ்சம் அனுபவம் இருக்கிறது உங்கள் கை, கால் தசைகளில் இன்னும் கொஞ்சம் வலிமை சேர்ந்தால் கீதையை இன் னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

உங்கள் இரத்தத்தில் வேகம் இருந்தால் ஸ்ரீகிருஷ்ணரின் மகத்தான ஆற்றலையும் மேதாவிலாசத்தையும் நீங்கள் இன்னும் சிறப்பாக அறிய முடியும். உங்கள் சொந்தக் கால்களில் நிமிர்ந்து நின்று ,உங்களை மனிதன் என்று உணரும் போது தான் நீங்கள் உப நிடதங்களையும் ஆன்மாவின் மகத்துவத்தையும் நன்றாக அறிந்து கொள்ள முடியும்.

# போர் மூளும் பீதியில் பாகிஸ்தான்; முப்படையினரும் தயார் நிலையில்

(இஸ்லாமபாத்)

மும்பைத்தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதாக இந்தியா வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டுவந்த பின்னரும் பாகிஸ்தான் தொடர்ந்து மறுத்து வரும் நிலையில் இரு நாடுகளுக்கிடையே போர் மூளும் சூழ்நிலை அதிகரித்துவருகிறது. போர்ப்பீதி பாகிஸ்தானை ஆட்டிவைக்க ஆரம்பித்துள்ளது.



பாகிஸ்தானின் முக்கிய நகரங்கள் மேல் , பாகிஸ்தான் பைட்டர் ஜெற் விமானங்கள் ரோந்துப்பணியை ஆரம்பித்துள்ளன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாகிஸ்தான் முப்படைகளையும் ஆயுத்தமாகும் படி அந்நாட்டு பிரதமர் கிலாணி அறிவுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் அனைத்து எல்லைப்பகுதிகளிலும் இராணுவ படைகளையும் குவித்து வருகிறது. மேற்குப்பகுதியில் ஜெய்சால்மர், பார்மர்,பூஜ் எல்லைகளிலும் பஞ்சாப் எல்லைகளிலும் எல்லைப்பாது காப்புப்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த வாரம் இந்திய பைட்டர்ஜெட் விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாக பாகிஸ்தான் எழுப்பிய குற்றச்சாட்டை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது.

கடந்த 60 ஆண்டுகளில் இந்தியாவும்-பாகிஸ்தானும் மூன்று முறை போர்களத்தில் சந்தித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தற்போது அனுசக்தி ஆயுத வல்லமையுடன் இருக்கும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் போர் மூளும் நிலை நிலவுகிறது.

முன்னதாக ,வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்தியா -பாகிஸ்தான் இடையேயான அமைதிப்பேச்சுவார்த்தை முடிந்து விட்டதாக வெளிப்படையாக கூறியுள்ளது, போர்ச் சூழலை உறுதிப்படுத்தியிருக்கிறது. (5)

## பயங்கரவாத நாடாக அறிவிக்குமாறு ஐ.நா. முன் இந்தியர்கள் ஆர்ப்பாட்டம்

(நியூயோர்க்)

பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்கக் கோரி இந்திய அமெரிக்க நிறுவனங்களைச் சேர்ந்த 200ற்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் ஐ.நா. அலுவலகம் முன் போராட்டம் நடத்தினர்.

பாகிஸ்தானில் நிறைவேற்றப்படும் பயங்கரவாத திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கும் சவூதி அரேபியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கோரி இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் இந்திய அமெரிக்க அறிஞர்கள் அமைப்பினர், நியூயோர்க்,நியூஜெர்சி மற்றும் கனக்டிகட் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்திய அமெரிக்கர்கள் ஐ.நா. அலுவலகம் முன் போராட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பாகிஸ்தானுக்கு நிதியுதவி அளிக்கும் நாடுகளைக் கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். (5)

உலக தரிசனம்

## முதல் தடவையாக நஷ்டத்தை சந்திக்கும் டோயோட்டா நிறுவனம்

உலகின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனங்களின் ஒன்றான டோயோட்டா நிறுவனம் கடந்த 71 ஆண்டுகளில் முதல் முறையாக இந்த ஆண்டு நஷ்டத்தைச் சந்திக்கப் போவதாக அறிவித்துள்ளது.

உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஜப்பானின் யென்நாணய மதிப்பு உயர்வு ஆகிய காரணங்களால் டோயோட்டா வின் விற்பனை வருமானம் வீழ்ச்சியடைந் துள்ளது. தனது ஒட்டுமொத்த இழப்பு 1.7 பில்லியன் டொலர்களாக இருக்கும் என்று அந்த நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவில் புதிய தொழிற்சாலை திறப்பதை ஒத்தி வைத்துள்ள டோயோட்டா நிறுவனம் பணியாளர்களின் எண்ணிக் கையை குறைக்கவும் திட்டமிட்டுள்ளது. (5)

## மலேசியாவில் 4700 பேர் வேலை இழக்கும் அபாயம்

அடுத்த 3 மாதங்களுக்குள் 4ஆயிரத்து 700 மலேசியர்கள் வேலை இழப்புக்கு ஆளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மலேசிய மனித வள அமைச்சர் எஸ்.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் பொருளாதாரம் சற்று நெருக்கடியான சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனால் மலேசியாவில் குறிப்பாக எலக்ரோனிக் தொழிற்சாலைகள் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. 102 எலக்ரோனிக் நிறுவனங்களில் பணியாற்றும் 4 ஆயிரத்து 749 பேர் எதிர்வரும் ஜனவரி முதல் மார்ச் மாதத்திற்குள் வெளியேற்றப் பட்டே தீரவேண்டிய சூழல் உருவாகியுள்ளதாகத் தெரிவித்தார். (5)

## மும்பை பாணியில் தாக்குதல் நடத்த சதி; மூன்று தீவிரவாதிகள் காஷ்மீரில் கைது

(ஜம்மு)

மும்பைத் தாக்குதல் பாணியில் காஷ்மீர் மாநிலத்தில் நாச வேலை செய்ய பாகிஸ்தானைச் சேர்ந்த திவீரவாதிகள் ஊடுருவியிருப்பதாக உளவுத்துறைக்கு நேற்று முன்தினம் ஒரு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து உளவுத்துறை நடத்திய விசாரணையில் 3 மனித வெடி குண்டு தீவிரவாதிகள் காஷ்மீருக்குள் புகுந்திருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.உடனடியாக உளவுத்துறையினர் காஷ்மீர் மாநில பொலிஸாரை உஷார்ப்படுத்தினார்கள்.

இந்நிலையில் நேற்று அதிகாலை ஜம்மு நகரில் சிறப்பு அதிரடிப்படை பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். ஜம்மு பஸ் நிலையம் அருகில் உள்ள ஹோட் டல் சாம்ராத்தை முற்றுகையிட்டும் சோதனை நடத்தப்பட்டது. அப்போது ஒரு அறையில் பதுங்கியிருந்த 3 வாலிபர்கள் பிடிபட்டனர்.

விசாரணையில் அவர்கள் மூன்று பேரும் பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்த தீவிரவா திகள் என்று தெரியவந்தது. அவர்கள் பாகிஸ்தானில் இயங்கிவரும் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பில் தற்கொலைப் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். காஷ்மீர் மாநிலத்தில் மும்பைப்பாணியில் பயங்கரத் தாக்குதலை நடத்த வந்ததை 3 தீவிரவாதிகளும் ஒத்துக் கொண்டனர்.

பிடிபட்ட 3 தீவிரவாதிகளின் பெயர் குலாம் பரீத் (வயது 25 )முகமது அப் துல்லா (22) முகமது இம்ரான் ஆகும்.

இவர்களில் குலாம் பரீத் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பிம்பெர் எனும் ஊரைச் சேர்ந்தவர்.

இந்த 3 தீவிரவாதிகளும் காஷ்மீரில் இன்று நடக்கவுள்ள இறுதிக்கட்ட தேர்தலை சீர்குலைத்து மாபெரும் நாச வேலைக்கு திட்ட மிட்டிருந்தது தெரியவந்துள்ளது.

வாக்காளர்கள் திரளும் பகுதிக்குச் சென்று சரமாரியாக துப்பாக்கிகளால் சுட்டுவிட்டு கடைசியில் தற்கொலை தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டி ருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 3 தீவிர வாதிகளிடமிருந்து துப்பாக்கிகள், வெடிகுண் டுகள் மற்றும் வரைபடங்கள் கைப்பற்றப்பட் டுள்ளன.

உளவுத்துறை சரியான நேரத்தில் பொலிஸை உசார்ப்படுத்தி 3 தீவிரவாதிகளை பிடிக்க வைத்ததால் மிகப்பெரிய நாச வேலை முறியடிக்கப்பட்டுள்ளது. (5)

## இந்திய இராணுவத்தளபதி எல்லைப்பகுதிகளுக்கு விஜயம்

பாகிஸ்தான் தீவிரவாதிகளை அழிக்க இந்தியாவின் முப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

உத்தரவு கிடைத்த மறு வினாடி விமானப்படைகள் சீறிப்பாய காத்திருக்கின்றன. இந்த நிலையில் நேற்றுக்காலை இந்திய இராணுவத்தின் மூத்த தளபதி தீபக் கபூர் சியாச்சின் எல்லைப்பகுதிக்கு விரைந்தார். எல்லையில் இந்திய இராணுவம் தயார் நிலையில் இருப்பதை பார்வையிட்டார்.

நேற்று அத்துடன் அவர் எல்லையில் உள்ள கட்டளைத்தளபதிகள், படைப் பிரிவுத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். பாகிஸ்தான் இராணுவம் ஊடுருவ முயன்றால் எத்தகைய பதிலடி கொடுப்பது என்பது பற்றி அவர் ஆய்வு செய்தார்.

இராணுவத் தளபதி தீபக் கபூரின் எல்லை நோக்கிய திடீர்ப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (5)

## புஷ் மீது வீசப்பட்ட சப்பாத்துக்களால் 100 பேருக்கு வேலை கிடைத்தது

அமெரிக்க ஜனாதிபதி புஷ் சமீபத்தில் ஈராக் சென்ற போது அவர் மீது தொலைக் காட்சி நிருபர் முண்டாசர் அல் ஜெய்தி தான் அணிந்திருந்த சப்பாத்துக்களை வீசினார்.

இதனால் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால் இந்த சப்பாத்துக்களைத் தயாரித்த துருக்கி கம்பனிக்கு அதிஷ்டம் அடித்துள்ளது.

துருக்கியில் உள்ள பேடன் ஷ் கம்பனி தான் புஷ் மீது வீசப்பட்ட சப்பாத்துக்களை தயாரித்தது. இந்த தகவல் வெளியுலகத்திற்கு தெரியவந்ததும் அந்தக்கம்பனிக்கு முற்பதிவுகள் குவியத்தொடங்கின.

அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட சப்பாத்துக்களுக்கு முற்பதிவு கிடைத்துள்ளன. இது வழக்கத்தை விட நான்கு மடங்கு அதிகமாகும்.

இதனால் அந்தக்கம்பனி கூடுதலாக மேலும் 100 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது.

அமெரிக்க கடை ஒன்று மட்டும் 18ஆயிரம் சப்பாத்துக்களுக்கு முற்பதிவு கொடுத்துள்ளது. ஈராக், ஈரான் , சிரியா, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்தும் முற்பதிவுகள் குவிந்துள்ளன. (5)

## தூக்கத்தில் இ-மெயில் பார்க்கும் பழக்கம் தெரியுமா?

(லண்டன்)

தூக்கத்தில் நடக்கிற வியாதி சிலருக்கு இருக்கும் என்று கேள்விப் பட்டிருப்பீர்கள் தூக்கத்தில் நெட் பார்க்கும் வியாதி இ -மெயில் அடிக்கும் வியாதி என்று கூட சிலருக்கு ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவில் ஒகியோ மாநிலத்தை சேர்ந்த 44 வயது பெண் இந்த வகையில் உலக சாதனை படைப்பார் என்று நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர். தூக்கத்தில் நடக்கிற வியாதி போல இவருக்கு தூக்கத்தில் நெட் பார்க்கும், இ-மெயில் அடிக்கும் வியாதி உள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் தூக்கத்தில் இ-மெயில் அடிக்கும் உலகின் முதல் நோயாளியாக இவர் இருக்கலாம் இன்னும் சிலர் எந்த நாட்டிலாவது கூட இருக்கலாம் என்றும் அமெரிக்க மனோதத்துவ நிபுணர் கள் கூறியுள்ளனர். இந்த பெண் தூக்கத்தில் இ-மெயில் அடித்தது தொடர்பாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் ***ஸ்லீப் மெடிசன்*** என்ற மருத்துவ இதழ் கட்டுரை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது, இந்த பெண் நள்ளிரவில் தூக்கத்தில் இருந்து எழுந்து கணனியை ஒன் செய்துள்ளார். இன்டர்நெட் பார்த்து அதில் மூன்று பேருக்கு மெயில் செய்துள்ளார். மறுநாள் அந்த மெயிலுக்கு பதில்கள் வந்துள்ளது. ஆனால் அவருக்கோ அதிர்ச்சி நான் இப்படிப்பட்ட மெயிலே அனுப்பவில்லை என்று அடித்துச் சொன்னார். மெயில் வாசித்து பார்த்தபோது நள்ளிரவில் 3 மெயில்கள் அனுப்பியது தெரியவந்தது.

மாதத்தில் ஓர் இருநாள் இப்படி இவருக்கு அனுபவம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவருக்கே அது தெரியவில்லை. வீட்டில் உள்ளவர்களும் இதைக் கண்டுபிடிக்க வில்லை. மருத்துவ நிபுணர்கள் இவரை விசாரித்து ஆராய்ச்சி செய்த போது பல விடயங்கள் தெரியவந்தன. தூக்கத்தில் நடக்கிற வியாதி சிலருக்கு உள்ளது போலத் தான் இந்த தூக்கத்தில் மெயில் பார்க்கிற வியாதி.

கணனியில் மூழ்கிக்கொண்டிருக்கும் பணியில் உள்ள அவருக்கு நண்பர்கள் எல்லோரும் மெயில் மூலம் தான் தகவல் பரிமாறிக் கொள்கின்றனர். இதனால் தூக்கத்திலும் அவருக்கு மெயில் நினைவு போவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமை கணனியை அதிகம் பயன்படுத்தும் இளம் தலைமுறையினருக்கு இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் இது தொடர்பாக இன்னும் பல ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். அப்போது தான் கனவில் சில உண்மை விடயங்கள் வந்துபோவதும் அதற்கேற்ப ஒருவரின் நடவடிக்கை மாறுவது போல இதிலும் சாத்தியம் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய முடியும். என்று நிபுணர்கள் எண்ணுகின்றனர். இவ்வாறு அந்தக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

தூக்கத்தில் எழுந்து கணனியில் மெயில் அனுப்பும் போது அவர் ஆங்கிலத்தில் பதிவு செய்த வார்த்தைகள் புரிந்துகொள்ள முடிகிறதே ஒழிய,தெளிவாக இல்லை என்பதையும் நிபுணர்கள் உணர்ந்தனர். (5)

# நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் பல நடைமுறைக்கு வரவில்லை

பெற்றோல் விலையை 22ரூபாவால் கடந்த புதன்கிழமை நள்ளிரவில் இருந்து குறைக்குமாறு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தமக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்று அமைச்சரவை பெற்றோல் விலையைக் குறைக்க மறுப்புத் தெரிவித்திருப்பது நீதித்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையிலான மோதலை புடம் போட்டுக் காண்பித்திருக்கிறது.

அண்மைக்காலமாக அரசாங்கத்தின் பல்வேறு செயற்பாடுகளை உயர்நீதிமன்றம் கட்டுப்படுத்துகின்ற போக்கு தென்பட்டது.

அடிப்படை உரிமைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்து உயர்நீதிமன்றம் அரசாங்கத்துக்கு பாதகமான தீர்ப்புகளை வெளியிட்டிருந்தது.

ஆனால் இந்தத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதுவே நீதித்துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் இடையிலான உச்சக்கட்ட முறுகலுக்கு காரணமாகியிருக்கிறது.

ஹெட்ஜிங் உடன்படிக்கை தொடர்பாக அண்மையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அசந்த டி மெல்லை உயர்நீதிமன்றம் பதவி நீக்கம் செய்தும்- பெற்றோலியத் துறை அமைச்சரான பௌசியை நீக்கிவிட்டு அந்த அமைச்சை பொறுப்பேற்குமாறு உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியிருந்தது.

ஆனால் அமைச்சர் பௌசி தொடர்பான தீர்மானம் எதையும் அந்தத் தீர்ப்பு வெளியாகிப் பல வாரங்களாகி விட்டபோதும் ஜனாதிபதி மஹிந்த எடுக்கவில்லை.

அமைச்சர் பௌசியை நீக்கிவிட்டு பசில் ராஜபக்ஸவை பெற்றோலியத்துறை அமைச்சராக நியமிக்க ஜனாதிபதி மஹிந்த திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகினவே தவிர நடைமுறையில் எதுவும் சாத்தியமாகவில்லை.

அதேவேளை பௌசியும் தன்னை இந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு வேறு அமைச்சுகள் எதைத் தந்தாலும் ஏற்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறு ஏற்கனவே உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப் படுத்த விரும்பாத கட்டத்தில் அரசாங்கம் இருக்கின்ற நிலையில்- பெற்றோலின் விலையை 100 ரூபாவாகக் குறைக்கின்ற உயர்நீதிமன்றத்தின் உத்தரவை செயற்படுத்த அரசாங்கம் பின்னடிக்கிறது.

புதன்கிழமை காலை வெளியான இந்த உத்தரவில் அன்று நள்ளிரவில் இருந்தே பெற்றோல் விலை குறைக்கப் படவேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இதையடுத்து அன்றைய தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டது.

ஆனால் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல் கிடைக் கவில்லை என்று கூறி முடிவேதும் எடுக்கப்படாமல் அந்தக் கூட்டம் முடிந்தது. இதன் காரணமாக வியாழக்கிழமை பெற்றோல் நிலையங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.




பெற்றோலின் விலையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், பின்னர் பெற்றோலுக்கு காத்து நிற்கும் மக்கள்.

அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆதரித்து அதே விலைக்கு விற்றால் எவரேனும் உயர்நீதிமன்றத்தை நாடினால் தாம் கூண்டில் ஏற வேண்டியிருக்கும் என்று பயந்து- எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பெற்றோல் விற்பனையை நிறுத்தி விட்டன.

இது நாடு முழுவதிலும் பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. மறுநாள் வியாழக்கிழமை மாலை மீண்டும் கூடிய அமைச்சரவையின் விசேட கூட்டத்திலும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவு பற்றியே விவாதிக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு இப்போது பெற்றோல் விற்பனை மூலம் கிடைக்கின்ற கொள்ளை இலாபத்தை விட்டுக் கொடுக்க மனமில்லை.

போருக்குத் தேவையான நிதியைப் பெறவும், பொருளாதார சிக்கல்களை சமாளிக்கவும் அதிக விலையில் எரிபொருளை விற்பதன் மூலம் ஈடுகட்டலாம் என்ற நினைப்பில் அரசாங்கம் இருந்தது. ஆனால் உயர் நீதிமன்றத்தின் தலையீடு அந்த நினைப்பில் மண்ணை அள்ளிப் போட்டிருக்கிறது.

அதிக விலைக்கு பெற்றோலை விற்று வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுகட்டலாம் என்ற அரசாங்கத்தின் கனவைக் கலைத்ததால் உயர்நீதிமன்றம் அரச நிர்வாகத்தில் அதிகளவில் மூக்கை நுழைப்பதாக அரசாங்கம் விசனமடைந்திருக்கிறது.

ஏற்கனவே, வீதிச் சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.ஆனால், அது நடைமுறைப் படுத்தப்படவில்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்ட- சந்தேக நபர்களின் தடுப்புக்காவல் உத்தரவை 6மாதங்களுக்கு நீடிப்பதற்கான அதிகாரத்தை ரத்துச் செய்தமை, நிதியமைச்சின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, பெற்றொலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசந்த டி மெல் போன்றோரை பதவி நீக்கியமை என்று உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகள் பல அரசாங்கத்தை வெறுப்புடன் நோக்க வைத்திருக்கிறது.

இந்தக் கட்டத்தில் அரசாங்கம் பொறுப்பு வாய்ந்ததொன்றாக இருந்திருப்பின் பெற்றோல் விலை குறைப்பு தொடர்பான விவகாரம் உயர் நீதிமன்றத்திடம் சென்றபோதே சமரசமாக விலைக் குறைப்புக்கு இணங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அதைச் செய்யாமல் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் கூட விலைக்குறைப்பு செய்ய மறுப்பது உயர்நீதிமன்றத்தை சவாலுக்கு அழைப்பது போன்றே உள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிந்த பின்னர் அமைச்சரவையின் இரண்டு விசேட கூட்டங்கள் நடத்தப் பட்டிருந்தன. அதில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்தே பிரதானமாக ஆராயப்பட்டிருக்கிறது.

ஆனால் பெற்றொல் விலைக் குறைப்புச் செய்வதற்கு மட்டும் அரசாங்கம் எதற்காக உயர்நீதிமன்றதின் உத்தியோகபூர்வ தீர்ப்பின் பிரதியை எதிர்பார்க்கிறதென்பது மட்டும் புதிராகவே உள்ளது. அரசாங்கத்தின் இந்தச் செயல் உயர்நீதிமன்றத்துடன் முட்டி மோதத் தலைப்பட்டுள்ளதையே வெளிப்படுத்துகிறது.

அதேவேளை அரசாங்கத்துக்கு எதிரான தீர்ப்புகளை வெளியிட்டு வருவதால் பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவது பற்றி ஆராயப் பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

இது நீதித்துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் இடையிலான மோதலை இன்னும் அதிகரிக்கவே செய்யப் போகிறது. இந்தக் கட்டத்தில் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை அரசாங்கம் புறக்கணிக்கத் தலைப்பட்டிருப்பதை ஐ.தே.க.,ஜே.வி.பி. போன்ற எதிர்க் கட்சிகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

நாட்டின் முதன்மை அதிகாரம் நடாளுமன்றத்துக்கே என்று சில அமைச்சர்களே வெளிப்படையாகக் கூறியதாக தகவல். அதேவேளை சட்டத்தின் ஆட்சியே நடைபெறுவதாகவும்- தாம் எழுந்தமானமான தீர்ப்புகளை வழங்கவில்லை என்று கூறியிருக்கிறார் பிரதம நீதியரசர்.

இப்போது நடந்து வருகின்ற நிகழ்வுகளைப் பார்க்கின்ற போது நீதித்துறைக்கும் நிர்வாகத் துறைக்கும் இடையிலான முறுகல் அதிகரிக்கும் போலவே தெரிகிறது.

அரசாங்கத்தின் திறமையற்ற நிர்வாகம், முறைகேடுகள், மோசடிகள் அதிகரித்திருப்பது எல்லாமே உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு செல்லத் தொடங்கியிருக்கின்ற நிலையில்- வரும் காலங்களில் இந்த முறுகல் இன்னும் தீவிரமடையலாம். அதேவேளை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை புறக்கணிக்கின்ற போக்கை அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடிக்குமேயானால் அது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும்.

**சத்திரியன்**

## காங்கிரஸைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுவரும் காங்கிரஸைக் கண்டித்தும் கைது செய்யப்பட்ட தமிழ் உணர்வாளர்களை விடுதலை செய்யக் கோரியும் தமிழ் நாட்டில் பல இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன.

பல்வேறு அமைப்புக்களும் இயக்கங்களும் காங்கிரஸ் பிரமுகர்களின் உருவப் பொம்மைகளையும், உருவப்படங்களையும் எரித்து தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வரும் நிலையில் ;தற்போது போராட்டங்கள் முனைப்புப் பெறத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் நேற்று சென்னை மேமொரியல் அரங்கம் அருகில் மக்கள் எழுச்சி இயக்கம் பேச்சு உரிமைக்கும் எழுத்து உரிமைக்கும் எதிராக செயற்படும் தமிழக காங்கிரஸ் கட்சியைக் கண்டித்தும்,கைது செய்யப்பட்ட தமிழ் உணர்வாளர்களை விடுதலை செய்யக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

இந் நிகழ்வில் மக்கள் எழுச்சி இயக்கம், தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், பெரியார் திராவிடர் கழகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களின் தலைவர்களும் எழுத்தாளர்களும் வழக்குரைஞர்களும் கலந்து கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். (ச-5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# வடக்கில் படை நடவடிக்கைகளை நிறுத்த முடியாது-பொன்சேகா

வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கைகளை நிறுத்த முடியாது என்று தரைப்படைத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள்; வட போர் முனையில் அனைத்து நிலைகளிலும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றனர். இறுதித் தோல்வியை நெருங்கி வரும் நிலையில் போரை நிறுத்துவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். ஆனால் வடக்கு படை நடவடிக்கைகளைக் கைவிடும் எண்ணம் இல்லை. தற்போது முல்லைத்தீவின் நெடுங்கேணி வீழ்ந்துவிட்ட நிலையில் எதிர்வரும் சில நாட்களில் விடுதலைப்புலிகளின் முக்கிய நிலைகளை வடக்கில் கைப்பற்றி விடுவோம். போர் நிறுத்த ஒப்பந்தத்தை; விடுதலைப் புலிகள் தாங்களைப் பலப்படுத்திக் கொள்ளவே பயன்படுத்திக் கொள்கின்றனர். புலிகளுக்கு மீண்டும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்கப் போவது இல்லை என்றார் சரத் பொன்சேகா. (ச-5)

## நால்வர் நீதிமன்றில் சரண்

இனம் தெரியாத ஆயுததாரிகளால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தலையடுத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் உட்பட நால்வர் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

வரணி வடக்கை சேர்ந்த சகோதரர்களான 26 வயதுடைய மேசன் தொழிலாளியும்; 25 மற்றும் 28 வயதான கூலித்தொழிலாளிகளும் சரணடைந்துள்ளனர். இவர்களுடன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 20 வயதான தச்சுவேலை செய்யும் ஒருவரும் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதை தொடர்ந்து யாழ். நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## உதவி நிறுவனங்கள்...

அங்கு செயற்பட்டு வந்த ஐ.நா. மன்றம் உள்ளிட்ட மற்ற பல தொண்டு நிறுவன பணியாளர்களை அவர்களின் பாதுகாப்பு காரணங்களை காட்டி அங்கிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் செப்டம்பர் மாதம் உத்தரவிட்டது. அவர்களின் பாதுகாப்புக்கு தம்மால் உத்தரவாதம் அளிக்க முடியாது என்று அரசாங்கம் கூறியிருந்தது.

கடுமையான மனித உரிமை மீறல் புகார்களுக்கு உள்ளாகியுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் இருந்து வெளியேறி வரும் தமிழ் மக்களை தடுப்பு காவலில் வைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்றும் ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு கூறியுள்ளது.

கடந்த சிலமாதங்களில் இப்படி வந்த சுமார் ஆயிரம் தமிழ் சிவிலியன்களை அரசாங்கம் தடுத்து வைத்திருப்பதாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு கூறுகிறது.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்களை தாம் நன்கு பராமரிப்பதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இவர்கள் காலவரையறையற்ற முறையில் மோசமாக பராமரிக்கப்படும் சிறை போன்ற இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு கூறுகிறது.

இதேவேளை மனித நேயப் பணியாளர்கள் வன்னிக்கு செல்ல அரசாங்கம் விதித்திருக்கும் தடையுத்தரவால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் போதியளவு உணவு, கூடாரங்கள் மற்றும் சுத்தமான நீர் இன்றி பாதிக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

## தேசிய சுதந்...

28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுபநேரத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது.

அலரி மாளிகையில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கைச்சாத்திடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கலைக்கப்பட்ட இரு மாகாண சபைத் தேர்தல்களிலும் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ள தேசிய சுதந்திர முன்னணி அது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்துடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச-5)

## படையினர் புலிகள்...

முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியதாவது, நேற்று அதிகாலை முதல் குறித்த பகுதியினூடாக முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்ட படையினர் மீது விடுதலைப்புலிகள் மறைந்திருந்து தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

இதன் போது பதில் தாக்குதல்களை நடாத்திய படையினர் விடுதலைப் புலிகளினால் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 300 மீற்றர் நீளமான மண் மேடுகளைத் தகர்த்தவாறு அப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

அத்துடன் நேற்று காலை தமது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள ஏ-35 பாதையில் அமைந்துள்ள சின்னப்பரந்தன் பகுதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை முல்லைத்தீவு குமுழமுனைப்பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை 7மணி முதல் மாலை 4.30 மணிவரை கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

இதன் போது குமுழமுனை பகுதி முழுவதும் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் இரு தரப்பிற்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றார். (ச-5)

## இன்று இரவு...

மக்களின் நலன் கருதி உற்சவம் நடைபெறும் நாட்களில் யாழ்.குடாநாடு உட்பட தீவகம் முழுவதும் தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு தளர்த்தப்படுகிறது.

நத்தார் தின இறை வழிபாடுகளில் கிறிஸ்தவ மக்கள் கலந்து கொள்ளும் முகமாக யாழ்.குடாநாடு உட்பட தீவகம் முழுவதும் 2008 டிசம்பர் 24 ஆம் திகதி (இன்று) நாள் முழுவதும் ஊரடங்கு தளர்த்தப்படும்.

அது கிறிஸ்தவ மக்களின் நலன் கருதியே மேற்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அமைச்சர்...

வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவரும் யாழ்.-கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ். குடாநாட்டிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தொடர்ந்து சில நாட்கள் யாழ்.குடாநாட்டில் தங்கியிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## முல்லைத்தீவு நகரை...

நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரில் மிகக் குறைந்த அளவிலான அரசாங்க ஊழியர்களும் பொது மக்களுமே தங்கியுள்ளதாகவும் ஏனையவர்கள் புதுக்குடியிருப்பு பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த பொன்னுத்துரை பொன்ராசா (வயது 31) என்ற பொது மகன் காயமடைந்துள்ளார்.

கடந்த வாரம் முல்லைத்தீவு வைத்திய சாலையில் ஷெல் வீழ்ந்து வெடித்ததை அடுத்து இருவர் காயமடைந்திருந்தனர். இதனையடுத்து இப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகின்றது. (ச-5)

## விடுதலைப் புலிகளின்...

பி.பி.சியிடம் தெரிவித்ததன் மூலம் கிளிநொச்சியை புலிகளினால் காப்பாற்றிக் கொள்ள முடியாதென்பதை ஏற்றுக் கொள்கிறார்.

அவரது வீரம் இன்று வெறும் புஸ்வாணமாகப் போய்விட்டது.

கடந்த சில தினங்களாக படையினர் தீரத்துடன் முன்னேறி புலிகளின் முக்கிய தளங்களைக் கைப்பற்றிய வண்ணமுள்ளனர்.

கிளிநொச்சியை சுற்றிவர புலிகளால் அமைக்கப்பட்ட மணல் திட்டுக்களை தகர்த்து அழித்துக் கொண்டு பரந்தன், இரணைமடு ஆகிய பிரதேசங்களை நோக்கி படையினர் முன்னேறும் இச் சந்தர்பத்தில் நடேசன் புலிகளின் இயலாமையை ஒப்புக் கொண்டுள்ளார்.

டிசம்பர் 16ஆம் திகதி படையினர் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கையில் இதுவரை 170க்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டும் அதன் இரு மடங்களவு படுகாயமடைந்தும் உள்ளனர்.

புலிகளின் கடுமையான எதிர்ப்பு, சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பாதகங்கள் என்பவற்றுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து இராணுவத்தின் 57-வது படையணியும் முதலாவது அதிரடிப்படையினரும் தொடர்ந்து கிளிநொச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## பொருளாதாரம் சீர்குலையும்...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஒரு விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நகரத்தை மட்டுமே மையமாகக் கொண்டது அல்ல.

நிலப்பகுதிகளை இழப்பதும் மீளக் கைப்பற்றுவதும் பொதுவானதுதான். எமது விடுதலைப் போராட்ட இலட்சியத்தை வென்றெடுக்கும் வரையில் தொடர்ந்து போர் நகரங்கள் உருவாக்கப்படும்.

அமைதிப் பேச்சுக்களுக்கு முன்னர் ஆயுதங்களை கைவிடவேண்டும் என்ற மகிந்த ராஜபக்ஷவின் நிபந்தனையை நிராகரிக்கிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் அதாவது ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைவிட்டுவிட்டு சரணடைய வேண்டும் என்று கோரி வரும் நிலையில் பேச்சுவார்த்தைகள் என்பது சாத்தியமல்ல.

போரில் எமக்கு இழப்புகள் ஏற்பட்ட போதும் இலங்கையின் 32 பில்லியன் டொலர் பொருளாதாரத்தை சீர்குலைப்பதே எமது இலக்காகும்.

எமது தற்காப்புத் தாக்குதல் நடவடிக்கையின் ஒரு பகுதி -இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைக்கப்படுவதுமாகும்.

இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைக்கப்படும்போதுதான் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் இனப் படுகொலையும் பலவீனப்படுத்தப்படும்.

கிளிநொச்சி போர்க்களத்தில் படையினருக்கு நாங்கள் பாடம் கற்பிப்போம். எமது வலிந்த தாக்குதல் நடவடிக்கையை தொடங்குவதற்கு உரிய காலம், இடத்திற்காக காத்திருக்கிறோம்.

2008 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 250 போராளிகளை நாங்கள் இழந்து இருக்கிறோம்.

ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதில் எமக்கு எதுவித சிக்கலும் இல்லை. நாங்கள் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என்றார் பா.நடேசன். (எ-5)

## சர்வதேச செஞ்சிலு...

விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கெங்காதரன் (வயது 32) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த நபர் வீட்டிலிருந்து வேலைக்காக புறப்பட்டுச்சென்று, பேருந்திலிருந்து இறங்கி நல்லூர்க் கோவிலின் பின்வீதியில் நடந்து சென்றுகொண்டிருக்கும் போதே இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ள அந்த நிறுவனத்தின் பேச்சாளரான சோஃபி ரோமனேன்ஸ், சுட்டுக்கொல்லப்பட்ட அந்தப் பணியாளர் 1999ஆம் ஆண்டு முதல் தமது நிறுவனத்தில் வாகன ஓட்டுநராக பணியாற்றியவர் என்றும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருடன் இணைந்து தாங்கள் செயல்பட்டு வருவதாகவும், பொலிஸ் விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில் தற்போது மேற்கொண்டு தகவல்களை வெளியிட இயலாது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மோதலில் ஈடுபடும் இரு தரப்பினருடனும் தாங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தமது சேவைகள் அங்கு தொடர்ந்து நடைபெறும் என்றும் சோஃபியா ரோமனேன்ஸ் கூறினார். (ச-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்



Diploma Courses...
* Dip In Computerized Accounting
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D
International Courses...
*MCP *MCSE *MCTS *MCSD
*CISCO *A+ *N+ *SUN JAVA *CIW *Dell
*ComTIA SECURITY+ *HP *Adobe *IBM *Linux
Degree Course * BIT Semester 1,3 & 5

## இன்றும்,நாளையும் பதிவுசெய்வோருக்கு கட்டண சலுகை

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


# கண்ணீர் அஞ்சலி

வலம்புரியின் பிரதம ஒப்புநோக்குநர் **க.லோகநாதன்** அவர்களின்

அன்பு மாமியார்

## திருமதி விசாலாட்சி சின்னத்துரை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

- வலம்புரிக் குடும்பம்.


SUBRA (14) கல்வி நிறுவனம்
சித்தங்கேணி

வழிகாட்டல் கருத்தரங்கு
2011 A/L மாணவர்களிற்கானது

காலம்: 26.12.2008 (வெள்ளி) 3.00 - 6.00
இடம்: வட்டு. இந்து நவோதயாக் கல்லூரி, சித்தங்கேணி

வளவாளர்கள்
திரு.க.தேவராஜா
(பீடாதிபதி, வணிக முகாமைத்துவ பீடம்)
கலாநிதி வை.மிகுந்தன்
(தலைவர், விவசாய பீடம்)
கலாநிதி க.வேல்நம்பி
(சிரேஷ்ர விரிவுரையாளர், வணிக முகாமைத்துவ பீடம்)

எதை? எவ்வாறு? தெரிவு செய்வதன் வாயிலாக வெற்றிபெறலாம்
அரியதோர் சந்தர்ப்பம் ஆசனங்கள் வரையறுக்கப்பட்டவை
(C-1902)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.